

Vol.29 | No. 1 | January 2025
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

JUBILEE 2025

## PILGRIMS OF HOPE

**“Hope does not disappoint” (Rom 5:5)**

*"For everyone, may the Jubilee be a moment of genuine, personal encounter with the Lord Jesus, the “door” (cf. Jn 10:7.9) of our salvation, whom the Church is charged to proclaim always, everywhere and to all as “our hope” (1 Tim 1:1).*

Pope Francis, SPES NON CONFUNDIT, no.1



Amalorpava Annai Feast,
December 8, 2024, Tenkasi Mission Station



Diocesan Bible Convention,
November 29 - December 1, 2024, Padanthalumoodu



Mathar Jothis Christmas Gathering,
December 14, 2024, St. Alphonsa College, Karinkal

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 No :1 JANUARY 2025



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயர் சுற்றுமடல் | 08 |
| மறைமாவட்ட கூரியா செய்திகள் | 12 |
| ஆயர் சுற்றுமடல் | 13 |
| மறைக்கல்வி | 20 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 25 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 26 |
| மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு | 28 |
| இல்வாழ்வு இயக்கம் | 29 |
| வின்சென்ட்-தே-பவுல் சபை | 31 |
| மரியாயின் சேனை | 33 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 35 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 38 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 38 |
| மறைமாவட்ட செய்திகள் | 39 |
| மறைவட்ட செய்திகள் | 40 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 52 |
| MONTHLY AGENDA - JANUARY 2025 | 56 |
| BISHOP'S ENGAGEMENTS | 59 |



## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. Edwinson**

**Fr. Antony Thakidiyel**

**Mr. Iyathurai**



Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Mary Jency V.M**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/165/2024**

**Dear Friends,** **31 December 2024**

Greetings and prayerful wishes from Bishop's House, Thuckalay!

The year 2024 is coming to an end. Throughout this year, our Eparchy witnessed remarkable growth and numerous blessings in its pastoral mission. Our parishes experienced a spiritual renewal through a good participation in liturgical celebrations and sacramental life. Youth ministry was vibrant with more young people engaging in church activities and faith formation programmes. The successful implementation of various social outreach initiatives by KKSSS, positively changed many lives in our communities. Diocese and Parish-level catechesis programmes saw greater involvement from both children and adults, strengthening the faith foundation of our faithful. The spirit of collaboration among priests fostered unity and effective pastoral care, while regular diocesan gatherings provided opportunities for spiritual enrichment and fraternal sharing. Our parishes undertook several infrastructure development projects, new churches, enhancing facilities for worship and community gatherings. The Uraviams became more active, fostering deeper faith relationships at the grassroots level. Our seminarians showed promising growth in their formation, while efforts are taken for new vocations from our parishes. Financial support from parishioners and benefactors remained steady, enabling continued mission activities and charitable works. The dedicated service of lay leaders and volunteers contributed significantly to the smooth functioning of parish and diocesan activities. At the same time, adopting of modern technology improved communication and administrative efficiency across the Eparchy. The various mission stations in the diocese were strengthened. We thank God for all these blessings we received throughout the year! I am also grateful to you, dear Fathers, for your unstinting support in making all our deliberations and decisions successful.

## Jubilee Year 2025

The Christmas we just celebrated was a momentous occasion as it marked the beginning of the celebration of the 2025th year of the birth of Jesus Christ. Pope Francis wanted the Catholics to celebrate it more meaningfully when he declared 2025 an ordinary Jubilee Year. As we know, the Holy Father initiated two years of preparation before celebrating Jubilee 2025. The year 2023 was dedicated to an in-depth study of Catholic doctrine, focusing on the four constitutions of the Second Vatican Council, namely, Dei Verbum (Dogmatic Constitution on Divine Revelation), Lumen Gentium (Dogmatic Constitution on the Church), Sacrosanctum Concilium (Constitution on the Sacred Liturgy) and Gaudium et Spes (Pastoral Constitution on the Church in the Modern World). We have tried to familiarise ourselves with these important documents through seminars and study sessions.

The year 2024 was devoted to prayer. This year, parishes, religious communities, and the faithful worldwide were called to deepen their prayer life and strengthen their relationship with God. We implemented various prayer initiatives, including extended hours of Eucharistic adoration, prayer vigils, and special devotional practices. We encouraged the faithful to rediscover traditional forms of prayers, the Rosary, and lectio divina while exploring contemplative prayer and meditation on Sacred Scripture. This emphasis on prayer helped us to create a spiritual foundation for the upcoming Jubilee, fostering a deeper sense of communion with God and preparing hearts for the graces of the Holy Year. The year of prayer also emphasised the connection between personal prayer and communal worship, reinforcing the understanding that prayer is essential for spiritual renewal and the authentic living of Christian hope, which will be the central theme of the Jubilee Year 2025.

On 9 May 2024, the Holy Father issued the bull of Indiction of the ordinary Jubilee of the year 2025 titled Spes Non-confundit (Hope does not Disappoint), announcing the motto of the Jubilee: Pilgrims of Hope to ensure a fitting spiritual celebration. In our Eparchy, we constituted a Jubilee committee to plan and chalk out the various events to make the Jubilee a moment of spiritual

renewal for our people. We solemnly inaugurated the Jubilee on 29 December 2024, and all the parishes are asked to do the same on 5 January 2025.

**Hope does not Disappoint**

The Bull of Indiction opens with the powerful theme "Hope does not disappoint" (Rom 5:5), which Pope Francis presents as the foundational message for the 2025 Jubilee Year. He contextualises this message within our contemporary world, particularly highlighting the aftermath of the global pandemic and the current challenges facing humanity. The Pope emphasises that Christian hope is not mere optimism but a theological virtue rooted in the certainty of God's love and faithfulness, which sustains us through difficulties and guides us toward the future.

The document elaborates on the spiritual significance of the Jubilee tradition, tracing its biblical roots from the Old Testament through its development in Church history. The Pope explains how the Jubilee symbolises God's mercy and the Church's mission of reconciliation. He emphasises that this Holy Year is meant to be a time of renewal, forgiveness, and spiritual awakening for all believers, with special attention to those who have drifted from their faith or feel marginalised from the Church.

The Bull outlines the four traditional pillars characterising the Jubilee celebration: a pilgrimage to Rome, reconciliation through the Sacrament of Penance, practising works of charity, and the special graces of indulgences. Pope Francis accentuates pilgrimage as a metaphor for the Christian life, describing how the physical journey to holy sites reflects our spiritual journey toward God. The symbolic act of crossing through the Holy Door is presented as a powerful gesture of conversion and commitment to Christian life.

The practical aspects of the Jubilee are detailed, beginning with the opening of the Holy Door at St Peter's Basilica on Christmas Eve 2024 and continuing through the Epiphany in 2026. The Pope extends the possibility of gaining Jubilee indulgences beyond Rome, enabling local churches worldwide to participate fully in the celebration. Special provisions are made for the sick, elderly, and imprisoned, ensuring that all members of the faithful can participate

in the Jubilee's graces regardless of their circumstances.

The social dimension of the Jubilee received significant attention, with Pope Francis calling for concrete actions of solidarity and care for the poor and marginalised. He connects the theme of hope with the urgent need for ecological conversion and social justice, challenging the Church to demonstrate hope through tangible works of mercy. The Pope emphasises that authentic spiritual renewal must be accompanied by a genuine commitment to addressing social inequalities and environmental challenges.

The Bull concludes with a profound meditation on Mary's role as the Mother of Hope, entrusting the Jubilee Year to her maternal intercession. Pope Francis invites all believers to embrace this time of grace as an opportunity for personal and communal transformation. He prays that the Jubilee will strengthen the Church's witness of hope and lead to a renewed commitment to evangelisation and Christian unity. He desires this Holy Year to help heal divisions, restore hope to the discouraged, and bring about a civilisation of love and peace.

**Inauguration of the Ordinary Jubilee 2025**

As we were told, the Holy Father Pope Francis solemnly inaugurated the Ordinary Jubilee 2025 in the Universal Church on 24 December 2024 by opening the Holy Door of the Papal Basilica of St Peter. He opened the Holy Door of the Cathedral St John Lateran on the Sunday after Christmas, 29 December 2024, for the Archdiocese of Rome. Moreover, on 1 January 2025, the Solemnity of Mary Mother of God, Pope Francis, will open the Holy Door of the Papal Basilica of Saint Mary Major. On Sunday, 5 January 2025, He will open the Holy Door, the Papal Basilica of St Paul, Outside the Walls.

On the day when the Holy Father opened the Holy Door in his Cathedral on 29 December 2024, all the diocesan bishops were invited to inaugurate the Ordinary Jubilee 2025 in their respective dioceses by celebrating the Holy Qurbana in their respective Cathedrals. Thus, I celebrated the inauguration of the Jubilee year Holy Qurbana at 8.00 am in St George Shrine Church, Munchirai,

and declared the Ordinary Jubilee year 2025 in our Eparchy of Thuckalay open. On that day for the Holy Qurbana, a specially crafted Jubilee cross was blessed and carried by the faithful in procession and solemnly enthroned in the Church. This will remain there throughout the ordinary Jubilee year, which will be concluded with the solemn Holy Qurbana on 28 December 2025.

**Pilgrimage and Plenary Indulgences**

During the Jubilee year, pilgrimage becomes a sacred journey of faith and renewal. Pope Francis emphasises that pilgrimage is essential to every Jubilee (SNC, no. 5), symbolising our human quest for meaning in life. Faithful are encouraged to make pilgrimages to the diocesan shrines designed by the bishop of the diocese to receive special graces and plenary indulgences.

In our Eparchy, the following shrines—St Alphonsa Shrine, Nagercoil, St George Shrine, Munchirai, and Holy Cross Shrine, Malaicode—are designated as places of pilgrimage for obtaining plenary indulgences. After spiritually preparing people to visit these centres, we could organise people to visit these shrines in groups. I urge you to follow the instructions of the Jubilee committee to conduct these pilgrimages in an orderly manner. I also encourage mission-league children and parish level Mission groups to visit the mission stations in the extended territories of our Eparchy.

A plenary indulgence is a grace the Catholic Church grants through the merits of Jesus Christ to remove temporal punishment due to sin. The indulgences apply to sins already forgiven. A plenary indulgence cleanses the soul as if the person has just been baptised. According to the Apostolic Penitentiary, plenary indulges obtained during the Jubilee year can also be applied to souls in purgatory with the possibility of obtaining two plenary indulgences for the deceased in one day. However, to obtain indulgence, the usual conditions of detachment from all sin, sacramental confession, holy communion, and prayer for the intentions of the Holy Father must be met.

In the jubilee year, Catholics are especially encouraged to practice the corporal and spiritual works of mercy. The Apostolic Penitentiary lists visiting prisoners, spending time with lonely elderly people, aiding the sick or disabled, and helping those who are

in need as instances to obtain an indulgence. Practising the works of mercy, it says, is "in a sense making a pilgrimage to Christ present in them." Indulgences for works of mercy can be received multiple times throughout the jubilee year, even daily. If the indulgence is applied to the deceased, two plenary indulgences can be obtained on the same day.

**A Call to Renewal**

Dear friends, as we embark on this Jubilee Year, I earnestly pray that this Jubilee Year will be a time of grace, deepening our relationship with God and fostering stronger bonds with our brothers and sisters in Christ. May this jubilee year be a time of profound spiritual renewal for the faithful of our Eparchy. Let it be marked not merely by external celebration but by deepening faith, hope, and love. As 'Pilgrims of Hope,' let us continue to build communion, promote participation, and deepen our commitment to the mission. The ordinary Jubilee 2025, an integral part of the synodal journey, invites us to be givers and agents of hope.

**CONCLUSION**

This year, we are called to focus intensely on spiritual renewal and deepening the faith life of their congregations through several key approaches. We prioritise offering regular spiritual direction sessions, contemplative prayer workshops, and guided spiritual experiences to help parishioners develop a more intimate relationship with God. We need to create meaningful retreat experiences, both in-person and virtual, that address contemporary challenges while grounding people in traditional spiritual practices and sacred scripture. We must revitalise the sacramental life of the parish, particularly through enhanced preparation for reconciliation and eucharistic devotion, helping parishioners rediscover these fountains of grace. Small faith-sharing groups/families led by trained lay leaders need to be supported. This spiritual rejuvenation will require us to become models of prayer ourselves. The Solemnity of Mary, Mother of God, that we celebrate on 1 January inspires us to re-commit ourselves to our mission like Mother Mary.

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12, Thuckalay PO, Kanyakumari Dt- 629 175, Tamil Nadu, India

# சுற்று மடல்

சீரோ மலபார் திருத்தொண்டு வாரம் 2025 சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் மார் ரஃபேல் தட்டில், தனது உடன்பணியாளர்களான பேராயர்கள் ஆயர்கள் அருட்பணியாளர்கள் துறவறத்தார்கள் மற்றும் தனது மேய்ப்பு பணியின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லா இறை மக்களுக்கும் எழுதுவதாவது;

ஈசோ மெசியாவில் அன்பு நிறைந்த சகோதர, சகோதரிகளே,

2025 ஜனவரி 6 முதல் 12 வரையிலான நாள்களில் சீரோ மலபார் திருச்சபையில் திருத்தொண்டு வாரமானது கொண்டாடப்படவிருக்கின்றது. நமது திருச்சபையின் திருத்தொண்டுப் பணிகளை அறிமுகம் செய்வதற்கும், திருத்தொண்டுப் பணியாளர்களை நன்றியோடு நினைவு கூருவதற்கும், திருத்தொண்டுப் பணிகள் செய்வதற்கு உதவுகின்ற சூழ் நிலைகள் உருவாக்குவதற்கும், திருத்தொண்டுப் பணிகளுக்காகவும் பணியாளர்களுக்காகவும் திருத்தொண்டு வாரத்தை சில வருடங்களாக நாம் கொண்டாடிக்கொண்டிருக்கின்றோம்.

திருமுழுக்கு பெற்றுக்கொள்கின்ற ஒவ்வொரு மனிதரும் திருத்தொண்டுப் பணியாளராக மாற்றப்படுகின்றனர். ஈசோ மெசியாவே திருத்தொண்டுப் பணியின் ஆதாரம். அவரது சிறந்த உடலாகும் திருச்சபை; மெசியாவின் பணியை தொடந்துகொண்டிருக்கின்றது. இயேசு சீடர்களுக்கு கற்பித்தவை எவையெனில் 'செல்லுங்கள்,' 'நற்செய்தியை பறைசாற்றுங்கள்,' சீடர்களை உருவாக்குங்கள்,' 'திருமுழுக்கு கொடுங்கள்,' 'கற்றுக்கொடுங்கள்,' 'அருளடையாளங்கள் வழியாக தூய்மைப்படுத்துங்கள்,' 'வழிநடத்துங்கள்,' 'நற்செயல்கள் செய்யுங்கள்,' 'ஜெபத்தில் ஆண்டவரோடு இணைந்திருங்கள்,' ஒற்றுமையில் இறை சமூகமாக வாழுங்கள், போன்றவையாகும். இவற்றை செய்கின்றபொழுது நாம் திருதொண்டுப் பணிகளில் ஈடுபடுகின்றோம்.

புனித யோவான் எழுதிய முதல் திருமுகத்தில் நாம் வாசிக்கின்றோம் "தொடக்க முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை

நாங்கள் கேட்டோம்; கண்ணால் கண்டோம்; உற்று நோக்கினோம்; கையால் தொட்டுணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள் கண்டோம் அதற்குச் சான்று பகர்கிறோம் (1:1). புனித யோவானைப் போல, தமது வாழ்வில் கண்டதும் கேட்டதும் தொட்டுணர்ந்ததுமான வாழ்வு தரும் இறை வார்த்தையை, நமது தந்தையாம் மார் தோமா நமக்கு பறைசாற்றினார். ஆகையால், திருத்தொண்டு ஆர்வம் உரிமையாக்கிக்கொள்வதற்காக நாம் முதலில் செய்ய வேண்டியது, மெசியாவை தனிப்பட்ட முறையில் உணர்ந்து அனுபவித்து வாழ்தல்.

இறையனுபவம் கிடைத்த மனிதர் பிறரில் ஆண்டவரை பார்க்கின்றனர். இறையன்புக்கும் பிறரன்புக்கும் இடையேயான பிணைப்பை, யோவான் இப்படி காட்டியிருக்கின்றார், "தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது" (1 யோவா. 4:20). நற்செய்தி, ஜெபம் மற்றும் அருளடையாளங்களால் உருவாகின்ற ஆண்டவரோடுள்ள ஒன்றிப்பின் பிரதிபலிப்பாக திருத்தொண்டுப் பணி அமைய வேண்டும். ஈசோவின் முகம் பிறரில் பார்க்க நமக்கு உதவுகின்ற சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புகளாக நமது நிறுவனங்கள் அமைகின்றன. நமது திருச்சபையில் ஏராளம் நிறுவனங்கள் உள்ளன. இறையன்பு மற்றும் பிறரன்பின் மையங்களாக நமது நிறுவனங்கள் அமைகின்றபொழுது அவை மக்களுக்கு நற்செய்தியாக மாறுகின்றன. இந்த சூழ்நிலைகளில் பயனுள்ள சான்றை மற்றவர்களுக்கு நம்மால் கொடுக்க முடிகிறதா என்று நாம் சோதித்து பார்க்க வேண்டும்.

திருத்தொண்டு பணிகள் யாருடைய பொறுப்பு என்பது, தீவிரமாக பகுப்பாய்வு செய்ய வேண்டிய கேள்வியாக இருக்கிறது. பணி குருத்துவத்திற்கு அழைப்புப் பெற்றிருக்கின்ற ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்களோடு இணைந்து திருமுழுக்கு வழியாக பொது குருத்துவத்தில் பங்கேற்றிருக்கும் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் சேர்ந்து திருத்தொண்டுப் பணிகளில் ஆர்வத்தோடு பங்கேற்க வேண்டும் என்பது தான் திருச்சபையின் நோக்கம்.

குருக்களும் துறவிகளும் திருத்தொண்டுப்பணிக்காக அவர்களின் முழு நேரத்தை மாற்றி வைக்கும்போது, பொதுநிலையினர் எவ்வாறு அவர்களின் நேரத்தை இறைப்பணிக்காக செலவழிக்கவேண்டும் என்பதை 2024 ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட சீரோ மலபார் உயர் பேராய மாமன்றத்தில் கலந்துரையாடப்பட்டது. திருத்தொண்டர்களுக்கும்

திருத்தொண்டுப் பணிகளுக்குமாக இடைவிடாது இறைவனிடம் ஜெபிக்கவும் பரிகாரச் செயல்கள் செய்யவும் பொதுநிலையினரால் முடியும். இதை மிகப்பெரிய திருத்தொண்டுப்பணியாக மாமன்றத்தில் எடுத்துக் கூறப்பட்டது. நம்மை சுற்றியிருக்கின்ற சூழ்நிலைகள் தன்னலமற்ற திருத்தொண்டுக்கான அர்ப்பணிப்பை கோருகின்றன. இதற்காக நேரத்தையும், தங்களது செல்வத்தையும் மாற்றி வைக்க பொதுநிலையினர்களால் முடியும்.

நமது திருச்சபையை சார்ந்தவர்கள் வெளியூர்களில் வேலைக்காக செல்கிறார்கள். இது அதிகரித்ததினால் நமது சபையானது புலம்பெயர்ந்தவர்களின் சபையாகவும் மாறியிருக்கிறது. இத்தருணத்தில் வேலைக்காக வெளியூர்களில் செல்கின்றவர்கள் திருத்தொண்டு சமூகமாக உருவாக்கப்படவேண்டும். வெளிநாடுகளில் நமது திருச்சபை உறுப்பினர்களின் விசுவாச வாழ்வானது பெரியதோர் திருத்தொண்டுச் சான்றாக விளங்குகின்றது. கிறிஸ்தவ மதிப்புகளை கடைபிடித்து குடும்ப வாழ்க்கை வாழ்தல். சார்ந்திருக்கும் பங்கோடுள்ள ஈடுபாடு ஆகிய புலம்பெயர்ந்தவர்களின் திருத்தொண்டுச் சான்றின் முதல் படியாக இருக்கின்றது. அவர்கள் இருக்கும் இடங்களில் நற்செய்திக்குச் சான்று பகர்ந்து வாழ இத்தருணத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சீரோ மலபார் திருச்சபையின் அனைத்து மிசன் மறைமாவட்டங்களும் நமது திருச்சபையின் மறைபரப்புத் தளங்களாக இருக்கின்றன. இங்கு எல்லாம் கல்வி, மருத்துவச் சேவை மற்றும் சமூக சேவை போன்ற பணிகளுக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இந்த இடங்களில் ஆசிரியர், செவிலியர், மருத்துவர், சுகாதார பணியாளர்கள் மற்றும் சமூக சேவகர்களாக சென்று இறைப்பணிச் செய்ய பொதுநிலையினர்களால் முடியும். இந்த வாய்ப்புகளை நமது திருச்சபையிலுள்ள அனைத்து பொதுநிலையினர்களும் மறைமாவட்டங்களும் பயன்படுத்த வேண்டும். மறைத்தொண்டுத்தளங்கள் சந்திப்பதும், அங்குள்ள சூழ்நிலைகள் நேரடியாகச் சென்று பார்ப்பதும் புரிந்து கொள்வதும் மறைபரப்புப் பணியை அன்பு செய்வதற்கும், உதவி செய்வதற்குமுள்ள ஆர்வத்தைத் தரும்.

திருத்தொண்டுப் பணிகளின் அடிப்படை என்பது இயேசுவின் நற்செய்தி. அதனால் நற்செய்தியை பறைசாற்றுங்கள் என்ற அடிப்படையான வேலை செய்யாமல் மறைப்பரப்புப் பணி முழுமையடையாது. எல்லா மக்களினங்களுக்கும் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்ற மெசியாவின் கட்டளை,

இன்றைய சமூகத்தில் நிறைவு செய்யப்பட்ட பாதையாக புதிய சமூக ஊடகங்கள் அமைந்துள்ளன. சமூக ஊடகங்களில் நேரம் செலவிடுகின்றவர்களுக்கும், சமூக ஊடகங்களை கூடுதலாக பயன்படுத்துகின்றவர்களுக்கும், அதை பயன்படுத்த திறமை வாய்ந்தவர்களுக்கும் திறம்பட நற்செய்தியை அறிவிக்க முடியும். இந்த துறைகளில் திறமை உள்ளவர்களோடு, குறிப்பாக இளையோர்களோடு, சமூக ஊடகங்களில் இயேசுவின் தொண்டர்களாக மாறிடக் கேட்டுக்கொள்கின்றேன். சமூக ஊடகங்களை பயன்படுத்தி நற்செய்தியை பல்வேறு வழிகளில் பறைசாற்றுகின்ற அனைவரையும் நன்றியோடு நினைத்து ஜெபிக்கிறேன்.

நம் ஆண்டவர் ஈசோ மெசியா மனிதராக பிறந்ததின் 2025ஆம் ஆண்டை சிறந்த யூபிலி ஆண்டாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இந்நேரத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியது போல், நாம் அனைவரும் எதிர்ப்பார்ப்பில் பயணிக்கின்றத் தொண்டர்களாக மாறுவோம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வருடம் நடந்த உலக திருத்தொண்டு தின மறையுரையில் எழுதியது என்னவெனில், இன்றைய உலகம் தொடர்பு ஊடகங்களின் காலம். கடவுள் நமக்காக விண்ணரசில் தயார் செய்து இருக்கின்ற விருந்தில் நமது சகோதரி சகோதரர்களையும் அழைத்துக் கொண்டுச்செல்ல வேண்டும். அத்திருத்தொண்டுப்பணியை செய்பவர்களாக நாம் மாற அவர் நம்மை அழைத்திருக்கின்றார். தனது விருந்திற்கு முதலில் அழைக்கப்பட்டவர்கள் வராமல் இருந்தபொழுது தெருவில் காணப்பட்ட அனைவரயும் அழைக்க பணியாளர்களை அனுப்பியவர் நம் ஆண்டவர். தகுதிப்பெற்றவர்கள் என்று நினைக்கின்றவர்கள், பெற்றுக்கொண்ட அழைப்பை புறக்கணிக்கின்றபொழுது, தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டவர்கள் அழைப்புப் பெறுகிறார்கள். எதிர்பார்பின் நற்செய்தியான இறை விருந்தின் அழைப்பிதழ் நம்மை சுற்றியிருக்கின்ற நம்பிக்கை குன்றியவர்களிடம் கொண்டு செல்ல இந்த திருத்தொண்டு வாரம் வழியாக நம்மால் இயலட்டும்.

சீரோ மலபார் திருச்சபை திருத்தொண்டு வாரம் கொண்டாடுகின்ற இந்நாட்களில் இந்தியா மற்றும் வெளிநாடு மறைபரப்பு தளங்களில் பணிபுரிகின்ற திருச்சபையின் அனைத்து மக்களையும் நன்றியோடு நினைவு கூருவதோடு, அவர்கள் அனைவரும் இறைப் பராமரிப்பில் வழிநடத்தப்பட நாம் ஜெபிப்போம். திருத்தொண்டுத் தளங்களில் மிக ஆர்வத்தோடு

பணி செய்கின்ற மறைமாவட்டங்களையும், குருக்களையும், துறவறத்தாரையும், முக்கியமாக பொதுநிலையினர் வாயிலாக திருத்தொண்டுப் பணி செய்கின்ற குழுக்களையும் முக்கியமாக நினைவிற்கொண்டு ஜெபிப்போம்.

இவ்வருடம் நடக்கின்ற திருத்தொண்டு தின கொண்டாட்டம் திறம்பட செயல்பட நமது திருச்சபையில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களும் மற்றும் அனைத்து அமைப்புகளும் தனிப்பட்ட முறையில் ஆர்வம் காட்ட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இளையோர்கள், மறைக்கல்வி மாணவர்கள் உட்பட்ட அனைவரிலும் மறைத்தொண்டு ஆர்வம் உருவாகும் விதத்திலான கொண்டாட்டங்களும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட வேண்டும். நமது திருச்சபையின் எல்லா மறைப்பரப்புப் பணிகளையும் ஒன்றிணைக்கின்ற மறைபரப்பு பேரவையுடையவும், மிசன் செயலகத்தினுடையவும் அனைத்துபணிகளோடும் கடந்த வருடங்களில் தாராள மனதுடன் ஒத்துழைத்தது போல இவ்வருடமும் தாராள மனதுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அனைவருக்கும் புத்தாண்டின் மகிழ்ச்சியும் அமைதியும் அன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈசோவில் அன்புடன் மவுண்ட் காக்கனாடு செயின்ட் தாமஸ், சீரோ மலபார் தலைமைச் செயலகத்திலிருந்து நவம்பர் 25, 2024 அன்று இச்சுற்றுமடல் வழங்கப்பட்டது.

மார் ராஃபேல் தட்டில்
சீரோ மலபார் சபையின் உயர்பேராயர்

## மறைமாவட்ட கூரியா செய்திகள்

பெங்கிரி, புனித பெனடிக்ட் ஆலயத்தின் பங்கு தந்தையாக பணியாற்றி வந்த அருட்தந்தை. பீட்டர் கிழக்கேயில் அவர்கள் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

பெங்கிரி, புனித பெனடிக்ட் ஆலயத்தின் புதிய பொறுப்பாளராக அருட்தந்தை. ஜார்ஜ் கண்டத்தில் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

*Circular letter No/GR/58/2024*

## ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பு நிறைந்த அருட்தந்தையர்களே, துறவறத்தாரே மறறும் இறைமக்களை! நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் அருளும் தந்தையாம் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!**

திரு வழிப்பாட்டு ஆண்டின் தொடக்கமாகிய மங்கள வார்த்தை காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து குழந்தை ஈசோவை வரவேற்பதற்கான ஆயத்த காலத்தில் நாம் நுழைந்திருக்கின்றோம். உலக மீட்பருக்காக மக்கள் ஆவலோடு காத்திருக்கின்ற நாட்களை நினைவு கூர்ந்து அவரின் பிறப்புக்காக நாம் செய்கின்ற ஆன்மீக தயாரிப்பு தான் டிசம்பர் 1முதல் 25 வரையுள்ள நோன்பு. நற்செயல்கள், தியாகம், இறைவேண்டல் மறறும் எதிர்நோக்கின் பயணிகளாக நீடிக்க இந்த நாட்கள் நமக்கு உதவுகின்றன. வாக்களிக்கப்பட்ட மீட்பருக்காக எதிர்ப்பார்ப்புடன் காத்திருக்கும் மக்களை நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம். எத்தனையோ தலைமுறைகள் கடந்து சென்ற பின்னும் அவர்கள் அவ்வாக்குறுதியில் நம்பிக்கை வைத்து காத்திருந்தார்கள். இறை வார்த்தை வீணாகி போகாது என்ற இஸ்ரயேல் மக்களின் திடமான நம்பிக்கையை நம்மால் இங்கு பார்க்க முடியும். நம்பிக்கையில் உறுதியாக நிற்பதன் சாட்சியம் தான்; மூதாதையர் ஆபிரகாமின் வாழ்க்கை. அவ்வாறுதான், மனிதரால் இயலாதது கடவுளால் முடியும் என்று நம்பி நமக்கு முன்மாதிரியாக இருக்கும் கன்னி மரியாவும். இது போன்று கணக்கிட முடியாதது, வர்ணிக்க இயலாதது மறறும் மிக சிறந்ததுமான காத்திருப்பின் பலன் தான் ஈசோ மெசியாவின் மனிதராதல். சோர்வுராமல் எதிர்பார்ப்புடன் இறைவேண்டலுடன் காத்திருக்க மங்கள வார்த்தை காலம் நம்மை அழைக்கிறது. இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் மிகவும் முக்கியமானது. ஒரே ஒரு மீட்பராகிய மெசியாவின் மனித உருவேற்றலின் 2025 ஆம் ஆண்டை நாம் கொண்டாடுகின்றோம். இது 'கிறிஸ்து யூபிலி 2025' என்று அறியப்படுகிறது. இந்த கிறிஸ்துமஸ் விழாவுடன் யூபிலி ஆண்டு தொடங்குகிறது. 'எதிர்ப்பார்ப்பு நம்மை ஏமாற்றுவதில்லை'

என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்பை ஏறறு; நம்பிக்கையின் பயணிகளாக ஒன்றிணைந்து பயணிக்க இந்த யூபிலி ஆண்டு நம்மை அழைக்கிறது. உலகளாவிய திருச்சபையுடன் இணைந்து நாம் கொண்டாடும் இந்த யூபிலி ஆண்டின் தகவல்களை இச்சுறறுமடல் வாயிலாக உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. யூபிலி ஆண்டை முன்னிட்டு, மறைமாவட்டத்தில் செய்யப்பட்ட முன்னேற்ப்பாடுகள்

2025 ஆம் சாதாரண யூபிலி ஆண்டிற்கான ஏற்பாடுகளின் தொடக்கம் டிசம்பர் 31, 2023 ஞாயிற்றுக்கிழமை அன்று நமது மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளிலும் தொடங்கப்பட்டது. மறைமாவட்டத்தின் அறிவுறுத்தலின்படி, அனைத்து பங்குகளிலும் அன்றைய தினம் திருப்பலி நேரத்தில் யூபிலி மெழுகுவர்த்தியை ஏற்றி யூபிலியின் சிறப்பு வேண்டுதலைச் சொல்லியதோடு, அன்று முதல் அனைத்து ஞாயற்றுக்கிழமைகளிலும் ஆர்ப்பரிப்பு மன்றாட்டின் போது வாசிக்க ஒரு சிறப்பு மன்றாட்டும் கொடுக்கப்பட்டது. அதுபோன்று, யூபிலியின் சின்னம், அனைவரும் பார்க்கும் வகையில் நமது அனைத்து ஆலயங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. யூபிலி 2025-ன் வரலாற்று பின்னணி மற்றும் பொருள், கிறிஸ்து யூபிலியின் நோக்கம், யூபிலி சின்னத்தின் பொருள் மற்றும் யூபிலி தயாரிப்பு ஆண்டாகிய 2024-இல் நாம் செய்ய வேண்டியவை பற்றிய எனது சுற்றுமடல் யூபிலி தயாரிப்பு ஆண்டு, ஜனவரி 2024 கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று நமது பாங்குகளில் வாசிக்கப்பட்டது. நாம் யூபிலி ஆண்டில் நுழையும்போது, பக்த இயக்கங்களிலும் உறவியங்களிலும் இதை மீண்டும் ஒரு சிந்தனைக்குரிய தலைப்பாக மாற்ற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். யூபிலி ஆண்டிற்கான ஏறப்பாடுகளின் ஒரு பகுதியாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அறிவுறுதத் லினால் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து குருக்கள் துறவிகள் மற்றும் பொதுநிலையினருக்காக இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டின் நான்கு முக்கிய ஆவணங்களை ஆய்வு செய்து விளக்கம் கொடுக்கும் வண்ணமாக கருத்தரங்குகள் கொடுக்கப்பட்டன. இதனுடைய சிற்றேடுகள் உறவியங்கள் மற்றும் அனைத்து பக்த இயக்கங்களிலும் ஆய்வு பாடமாக தரப்பட்டன. இந்த காலகட்டத்தில், நமது பங்குகளில் நடைபெற்ற நற்கருணை ஆராதனை, திருச்சபையின் பொது வேண்டுதல்கள், தனிப்பட்ட ஜெபங்கள் ஆகியவற்றின் வழியாக, ஆன்மீக வாழ்க்கையில் நம்மால் வளர முடிந்தது. இவ்வாறு 2025 கிறிஸ்து யூபிலி ஆண்டில் நாம் பெரும் ஆயத்தத்துடன் நுழைகிறோம்.

## 2. யூபிலியின் அதிகாரப்பூர்வமான அறிவிப்புகள்

மே 9, 2024 அன்று, நமது ஆண்டவரின் விண்ணேற்புப் பெருவிழா நாளில், வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பேராலயத்தில் நடைபெற்ற விழாவில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 'எதிர்நோக்கு நம்மை ஏமாற்றமடைய செய்வதில்லை' (Spes non Confundit) என்ற ஆணை ஓலை மூலம், யூபிலி ஆண்டு 2025ஐ அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்' (Pilgrims of Hope) என்பது யூபிலி ஆண்டின் மையச் சிந்தனையாகத் தரப்பட்டிருக்கிறது.

## 3. யூபிலியின் ஆரம்பம் மற்றும் முடிவு

உலகளாவிய திருச்சபையில் டிசம்பர் 24, 2024 அன்று வத்திகானில் உள்ள புனித பேதுரு பேராலயத்தின் 'புனித வாயிலை' திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திறப்பதன் மூலம் 2025 யூபிலி ஆண்டு தொடங்கப்படும். திருச்சபையில் யூபிலி ஆண்டின் முடிவு ஜனவரி 6, 2026 ஆகும். டிசம்பர் 29, 2024 அன்று, உலகின் அனைத்து பங்குகளின் தாய் பங்கு என்று அழைக்கப்படும் ரோமாபுரியில் அமைந்துள்ள புனித ஜாண் லேட்டரன் பசிலிக்காவின் புனித கதவு திறக்கப்படும் போது, உலகம் முழுவதுமுள்ள அனைத்து மறைமாவட்ட பேராலயங்களில் மறைமாவட்ட ஆயர்கள் தலைமையில் திருப்பலியுடன் யூபிலி கொண்டாட்டங்கள் தொடங்கப்படும். மறைமாவட்ட அளவில் யூபிலி கொண்டாட்டங்க் ள் டிசம்பர் 28, 2025 அன்று நிறைவடையும்.

## 4. யூபிலி திருத்தலங்கள்

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மறைமாவட்ட ஆயர் அறிவிக்கின்ற திருத்தலத்தை நோக்கி ஆன்மீகத் தயாரிப்புடன் பயணம் செய்யும் விசுவாசிகள் திருச்சபையால் தீர்மானிக்கப்பட்ட பரிபூரண பலன்களை பெறுவதே இந்த யூபிலி ஆண்டின் தனிச்சிறப்பு. எனவே, நமது மறைமாவட்டத்தில் உள்ள மூன்று பங்குகளை கிறிஸ்து யூபிலி ஆண்டிற்கான திருத்தலமாக அறிவிக்கிறேன்.

i. திருச்சிலுவை ஆலயம், மாலைக்கோடு

ii. புனித அல்போன்சா திருத்தலம், நாகர்கோவில்

iii. புனித ஜார்ஜியார் திருத்தலம், முஞ்சிறை

டிசம்பர் 29, 2024 முதல் டிசம்பர் 28, 2025 வரை, இந்த மூன்று ஆலயங்களும் கிறிஸ்து யூபிலி ஆண்டிற்கான திருத்தலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. கடைசி இரண்டு ஆலயங்கள் நமது மறைமாவட்டத்தின் திருத்தலங்களாக ஏறக்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

### 5. யூபிலி சிலுவை

திருச்சபையில் யூபிலி ஆண்டின் அடையாளமாக 'புனித வாயில்' பயன்பபடுத்தப்படுகின்றது. அதுப்போன்று மறைமாவட்டங்களில் கிறிஸ்து யூபிலி ஆண்டின் அடையாளமாக 'அலங்கரிக்கப்பட்ட சிலுவை' பயன்படுத்தப்பட வேண்டும். சிலுவையில் கடவுளின் இரக்கத்தை நாம் காண்கிறோம். இந்த யூபிலி ஆண்டு முழுவதும் நமது மறைமாவட்டத்தின் மூன்று திருத்தலங்களிலும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட யூபிலி சிலுவை வைக்கப்படும். இப்படி ஒவ்வொரு பங்குகளிலும் யூபிலி சிலுவை வைக்கப்பட்ட வேண்டும்.

### 6. நமது மறைமாவட்டத்தில் யூபிலியின் ஆரம்பம் மற்றும் முடிவு

டிசம்பர் 29, 2024, ஞாயிற்றுக்கிழமை திருக்குடும்பத் திருநாள் அன்று, காலை எட்டு மணிக்கு, நமது மூன்று திருத்தலங்களிலும் ஒரே நேரத்தில் எதிர்நோக்கின் அடையாளமான அலங்கரிக்கப்பட்ட சிலுவையுடன் பவனியாக வந்து யூபிலி விளக்கும் ஏற்றப்படும், தொடர்ந்து திருப்பலியுடன் மறைமாவட்ட அளவிலானா யூபிலி தொடங்கப்படும். முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலயத்தில் எனது தலைமையிலும், மற்று இரண்டு திருத்தலங்களில் மறைமாவட்ட கூரியா உறுப்பினர்களின் தலைமையிலும் யூபிலி தொடக்க விழா நடைபெறும்.

ஒவ்வொரு பங்கிலிருந்தும் நான்கு பிரதிநிதிகள், இரண்டு கைக்காரர்கள் மற்றும் இரண்டு மாதர் ஜோதிஸ் உறுப்பினர்கள், மறைமாவட்ட யூபிலி தொடக்க விழாவில் கலந்து கொள்ள நான் விரும்புகிறேன். ஆறுகாணி, களியல், மஞ்சாலுமூடு ஆகிய மறைவட்டங்களை சேர்ந்தவர்கள் மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்திலும், நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டங்களை சேர்ந்தவர்கள் முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலயத்திலும், சூசைபுரம், தக்கலை-பிளங்காலை ஆகிய மறைவட்டங்களை சேர்ந்தவர்கள் நாகர்கோவில் புனித அல்போன்சா ஆலயத்திலும் கலந்துகொள்ள வேண்டும். மறைமாவட்ட அளவில் யூபிலி ஆண்டின் நிறைவு 2026 ஜனவரி 4 அன்று ஆகும்.

2025 ஜனவரி 5ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் யூபிலி தொடக்கவிழா கொண்டாட வேண்டும். அதற்கான விதிமுறைகள் அருட்தந்தையர்கள் வழியாக உங்களுக்குத் தெரிவிக்கப்படும். டிசம்பர் 28, 2025 அன்று பங்குகளில் யூபிலி கொண்டாட்டம் நிறைவடையும். நமது அனைத்து பங்குகளிலும் யூபிலியின் அடையாளமாக யூபிலி விளக்கு, திருச்சிலுவை மற்றும் யூபிலி சின்னம் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஆர்ப்பரிப்பு மன்றாட்டில் ஒரு யூபிலி மன்றாட்டு சேர்க்கப்பட வேண்டும். இந்த ஆண்டு அனைத்து பொது நிகழ்வுகளிலும்

பயன்படுத்த ஒரு யூபிலி கீதம் தயாரிக்கப்படுகிறது.

**7. மறைமாவட்ட யூபிலி கொண்டாட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்**

'கிறிஸ்துவைக் கொண்டாடுதல், திருச்சபையை கொண்டாடுதல் மற்றும் நம்பிக்கையைக் கொண்டாடுதல்' ஆகிய மூன்று நோக்கங்களின் அடிப்படையில் குருக்கள், துறவிகள் மற்றும் பொது நிலையினர்கள் என அனைத்து இறை மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும் வகையில் யூபிலி கொண்டாட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பக்த இயக்கங்களின் சார்பாக தயாரிக்கப்பட்ட யூபிலி கொண்டாட்டங்களின் விவரங்கள் அனைத்து பங்குகளின் நுழைவாயிலுக்கு அருகில் வைக்கப்படும். இந்த அனுசரிப்புகளுக்கு அனைவரும் முழுமையாக ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். யூபிலி ஆண்டிற்கு சிறப்பாக அமைக்கப்பட்ட குழுவின் மேற்பார்வையில் அனைத்தும் செய்யப்படும். இது தவிர, மறைமாவட்ட மக்கள் பின்வரும் விஷயங்களை மிகுந்த முக்கியத்துவத்துடன் பார்க்க வேண்டுகிறேன்.

**a) திருப்பயணம் மறறும் பரிபூரணப் பலன்**

திருப்பயணம் நம்பிக்கை வாழ்வை பெரிதும் பலப்படுத்துகின்றன. இந்த யூபிலி ஆண்டில், பங்கு ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ சில நாட்கள் தியாகங்கள் எடுத்து தயாராகி, முடிந்தால் கால்நடையாக, ஆவியாரின் வல்லமையால் திருப்பயணம் ஏற்பாடு செய்யலாம். நமது மறைமாவட்டத்தில் உள்ள மூன்று திருத்தலங்களை நோக்கி இந்த பயணத்தை மேற்கொள்ள முடியும். நமது திருத்தலத்திற்கு பயணம் செல்லும் நம்பிக்கையாளர்கள் யூபிலி வருடத்தில் திருத்தந்தை அறிவித்த பரிபூரணப் பலன்களைப் பெறுவார்கள். ஒப்புரவு அருட்சாதனம் மூலம் மன்னிக்கப்பட்ட பாவங்களின் தற்காலிக தண்டனையிலிருந்து (temporal punishment) ஒரு மனிதனுக்கு திருச்சபையில் மெசியா ஒப்படைத்த நல்லொழுக்கத்தின் கருவூலத்தின் மூலம் கிடைக்கின்ற முழு அல்லது பகுதி விடுவிப்பு தான் பரிபூரணப் பலன் (indulgences) என்பது. ஒப்புரவருட்சாதனம் எடுத்து, திவ்ய நற்கருணை பெற்று, நமது மறைமாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு திருத்தலத்தில் நுழைந்து பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் பரிபூரண விடுதலை கிடைக்கும்.

1. திருப்பலியில் கலந்து கொள்ளுதல் அல்லது ஜெபமாலை மற்றும் சிலுவை பாதை போன்ற வழிபாடுகளை செய்தல்.
2. யூபிலி சிலுவையை வணங்கி, நற்கருணை ஆராதனை, தனிப்பட்ட ஜெபங்கள் அல்லது தியானத்தில் சிறிது நேரம் செலவிடுதல்.
3. திருதந்தையின் கருத்துக்களுக்காக ஒரு விண்ணுலகில்

இருக்கின்ற என்ற ஜெபமும் மற்றும் நம்பிக்கை அறிக்கை சொல்லி தூய கன்னி மரியாவின் பரிந்துரைக்காக மன்றாடுதல். இறைவனின் அளவற்ற கருணையை நீங்கள் அனுபவிப்பதற்காக வருடத்திற்கு ஒருமுறை மட்டும் அல்லாமல் இந்த யூபிலி வருடத்தில் பலமுறை முழுமையான பரிபூரண பலனை பெறுங்கள் என்று அன்புடன் நினைவூட்டுகிறேன்.

**b) திருத்தொண்டு தளங்கள் சந்திப்பு**

நம்பிக்கையின் நற்செய்தியுடன் உங்கள் பங்குகளிலிருந்து மறைமாவட்டத்தின் திருத்தொண்டு தளங்களுக்கு இந்த யூபிலி ஆண்டில் பயணம் மேற்கொள்ளுமாறு நான் உங்களுக்கு குறிப்பாக நினைவூட்டுகிறேன். இந்த யூபிலி ஆண்டில், நீங்கள் அனைவரும் பங்கு அளவில் அல்லது பக்த இயக்கங்கள் தலைமையின் கீழ் திருத்தொண்டு தளங்கள் சந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். தென்காசி, திருநெல்வேலி, கயத்தாறு, விருதுநகர், இராமேஸ்வரம், மதுரை, கம்பம், தேனி போன்ற விரிவாக்கப்பட்ட மிசன் இடங்களுக்கும் மற்றும் நீண்ட தூரம் பயணிக்க முடியாதவர்கள் அருகாமையிலுள்ள மிசன் பங்குகளுக்கும் சென்று சந்திக்கலாம். மேலும், திருத்தொண்டு தளங்களுக்கு சென்று திருப்பலியில் கலந்துகொள்வதும் அன்பின் விருந்தில் பங்கேற்பதும் நம்பிக்கை நிறைந்த ஒரு புதிய சமூகத்தை உருவாக்க உதவுகிறது.

**c) தொடர்ச்சியான ஒப்புரவருட்சாதனம்**

இந்த யூபிலி ஆண்டு என்பது கடவுளின் இரக்கத்தை அனுபவிக்க ஒரு மிகச் சிறந்த வாய்ப்பாக அமைகின்றது. ஒப்புரவருட்சாதனம் வழியாக கடவுளின் இரக்கத்தை நாம் அதிகமாக அனுபவிக்கிறோம். எனவே, இந்த யூபிலி ஆண்டில், அனைத்து இறைமக்களும் ஒப்புரவு அருட்சாதனத்தை தொடர்ச்சியாகப் பெற்று கொண்டு, இறைவனின் இரக்கத்தை அனுபவிக்குமாறு உங்கள் அனைவருக்கும் அன்புடன் நினைவூட்டுகிறேன். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டு, நமது மூன்று திருத்தலங்களிலும் பாவசங்கீர்த்தனம் பெற்றுக்கொள்ள் சிறப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்படும் என்பதை தெரியப்படுத்தி கொள்கிறேன். அதைப்போன்று, ஒவ்வொரு பங்குகளில் பாவசங்கீர்த்தனத்திற்காக நேரத்தை ஒதுக்கி வைப்பதில் பங்குத்தந்தைகள் அக்கறை கொள்ளவும் நினைவூட்டுகிறேன்.

**d) திருவிவிலியம் வாசித்தல்**

வார்த்தை நம் நடுவில் மனிதராக பிறந்ததன் யூபிலியை நாம் கொண்டாடும்போது, நம் தனிப்பட்ட வாழ்க்கையில் கடவுளுடைய வார்த்தையைப் படிப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்போம். இந்த யூபிலி ஆண்டை 'திருவிவிலியம் வாசித்தல் ஆண்டாக' மாற்றும், முழு திருவிவிலியத்தையும் படிக்க கவனம் செலுத்துங்கள். இதற்கான வழிமுறைகளை மறைமாவட்ட மறைக்கல்வி

நிலையத்திலிருந்து உங்களுக்கு கொடுக்கப்படும்.

**e) இரக்கத்தின் செயல்கள்**

ஈசோ மெசியா மனிதராக பிறந்தது கடவுளின் இரக்கத்தின் பிரதிபலிப்பாக இருக்கின்றது. இருளில் வாழ்ந்த மக்கள் ஒளியைக் கண்டது போல் இருளான வாழ்வில் நம்பிக்கையின் ஒளியை ஏற்ற இந்த யூபிலி ஆண்டில் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இந்த யூபிலி ஆண்டில் உடல் சார்ந்த மறறும் ஆன்மா சார்ந்த இரக்க செயல்களில் அதிக கவனம் செலுத்த உங்களை நான் அழைக்கிறேன். வறுமை, நோய், அடிமைத்தனம், போன்ற அவர்கள் வாழ்க்கையில் இந்த நம்பிக்கையின் எதிர்பார்ப்பின் செய்தி சென்றடைவதை நாம் உறுதி செய்ய வேண்டும். இந்த புனித ஆண்டில், மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் என நம்பிக்கை மங்கலாகத் தோன்றும் இடங்களுக்குச் சென்று அங்கு உள்ளவர்களை சந்திக்க வேண்டும்.

**8. முடிவுரை**

என் அன்பான இறை மக்களே, புனித ஆண்டின் முக்கியத்துவம் கடவுளின் பொறுமை மற்றும் இரக்கம் வழியாக உங்களை பலப்படுத்தும் என்பது உறுதி. வாழ்க்கையில் நிச்சயமறற் நிலைகள் மற்றும் நெருக்கடிகள் வருகின்ற போது, ஈசோவின் மீதுள்ள நம்பிக்கை யாரையும் ஏமாற்றமடைய வைப்பதில்லை என்ற கருத்து; காலகட்டத்தின் தேவையாக அமைகின்றது. இல்லையெனில் இந்த ஜூபிலி ஆண்டும் மற்ற ஆண்டுகளைப் போல் கடந்து போகும். மாறாக, இந்த யூபிலி ஆண்டு ஆற்றலின் செய்தியை நமக்கு வழங்குகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விரும்பும் யூபிலி ஆண்டு நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் நிகழட்டும். மெசியாவை பறைசாற்றி, திருச்சபையை அன்பு செய்து, நம் நம்பிக்கையை ஒரு கொண்டாட்டமாக மாற்றுவோம். யூபிலி ஆண்டை ஆசியாக மாற்ற நம்பிக்கையின் எதிர்நோக்கின் பயணிகளாக இணைந்து பயணிப்போம்.

நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் அருள் உங்கள் மேல் இருப்பதாக. கிறிஸ்து பிறப்பு திருவிழா மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தி கொள்கின்றேன்.

**ஆயர் இல்லம்**

**11.12.2024**

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

**என்றும் ஈசோ மெசியாவில்**

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB

**தக்கலை மறைமாவட்ட ஆயர்**




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

## "நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன" (உரோமையர் 10:15)

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

***கிறிஸ்மஸ் விழா கூட்டம்***

மறைக்கல்வி தலைமை ஆசிரியர்கள், ஊக்குவிப்பாளர்கள், மறைவட்ட செயலர்கள், நற்செய்தி நிலைய செயலர், அலுவல செயலர் ஆகியோரின் கிறிஸ்மஸ் விழா கூட்டமானது டிசம்பர் 7 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு KKSSS அரங்கில் வைத்து நடைபெற்றது. இதில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB, குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ்



பவ்வத்துபறம்பில், குழந்தை ஈசோ இயக்க இயக்குநர் தந்தை டோஜி, குழந்தை ஈசோ இயக்கப் பொறுப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். அருட்தந்தை டோஜி அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். ஊக்குவிப்பாளர் திரு. விஜயராஜன் கிறிஸ்து பிறப்பு செய்தியை பகிர்ந்தார். ஒவ்வொருவரும் நட்சத்திரங்களாக வலம் வர வேண்டுமென்ற செய்தியை பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து ஆயர் அவர்கள் கேக் வெட்டி தலைமையுரையாற்றி கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். இக்கூட்டத்தின் போது ஊக்குவிப்பாளர் திரு. எட்வின்சன் அவர்கள் இயக்குநர் அவர்களின் பெயர் கொண்ட தின வாழ்த்துக்களை தெரிவித்து உரை நிகழ்த்தினார். இறுதியாக இயக்குநரின் உரையுடன் கிறிஸ்மஸ் விழா நிறைவுற்றது.

### *விவிலியக்கலைவிழா மறைவட்ட போட்டிகள்*

2024-25 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள் டிசம்பர் 27 வெள்ளிக்கிழமை ஆறுகாணி மற்றும் மஞ்சாலுமூடு, டிசம்பர் 28 சனிக்கிழமை நித்திரவிளை, டிசம்பர் 30 திங்கட்கிழமை தக்கலை–பிலாங்காலை மற்றும் சூசைபுரம், டிசம்பர் 31 செவ்வாய்க்கிழமை படந்தாலுமூடு மற்றும் களியல் ஆகிய மறைவட்டங்களில் நடைபெற்றன. இவை மறைவட்ட இயக்குநர்



தந்தையரின் தலைமையில் நடைபெற்றன. போட்டிகள் காலை 8.30 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமாயின. 9.30 மணிக்கு தொடக்க விழா நடைபெற்றது. தொடர்ந்து போட்டிகள் 10 முதல் மாலை 4.30 மணி வரை 5 அரங்குகளில் நடைபெற்றன. இறுதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. விவிலியக்கலை விழாப்போட்டிகள் நடைபெற்ற நாட்களில் தக்கலை பிலாங்காலை மறைவட்டத்தில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவ்வத்துப்பறம்பில் அவர்கள் வருகை புரிந்து குத்து விளக்கேற்றி கலைவிழாவை துவக்கி வைத்தார். விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள் மிகச்சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்களான பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ், அருட்தந்தை ஜோசப் கொச்சீத்தறா, அருட்தந்தை ஜார்ஜ் கண்டத்தில், அருட்தந்தை எபி பூவத்துமூட்டில், அருட்தந்தை. அஜீஷ் அட்டியில், அருட்தந்தை லுக்கா கொல்லம்பறம்பில் மற்றும் மறைவட்ட செயலர்கள் அருட்சகோதரிகள் அனிதா S.H, லீனா றோஸ் CMC, எல்சீனா ASMI, லின்ஸ் SABS, லிசி மேத்தியு SH, வளனரசி SDS. ஜோதிஸ் FCC ஆகியோர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

***மறை வட்ட அளவிலான போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்கள்***

## Arukany Forane

| Parish | Score | Rank |
|---|---|---|
| Arukany | 133 | 1 |
| Netta | 100 | 2 |
| Pathukany | 91 | 3 |
| Mezhacode | 75 | 4 |
| Penuthadam | 20 | 5 |
| Anamugham | 8 | 6 |

## Kaliyal Forane

| Parish | Score | Rank |
|---|---|---|
| Kaliyal | 115 | 1 |
| Pallikonam | 114 | 2 |
| Marappady | 106 | 3 |
| Karode | 73 | 4 |
| Kulasekharam | 22 | 5 |

## Manjalumoodu Forane

| Parish | Score | Rank |
|---|---|---|
| Manjalumoodu | 139 | 1 |
| Muzhucode | 112 | 2 |
| Mukkoottukkal | 111 | 3 |

| | | |
|---|---|---|
| Malaicode | 44 | 4 |
| Thettivilai | 17 | 5 |
| Kuttaicode | 3 | 6 |

## Padanthalumoodu Forane

| Parish | Score | Rank |
|---|---|---|
| Padanthalumoodu | 100 | 1 |
| Annikkarai | 87 | 2 |
| Palugal | 87 | 2 |
| Kazhuvanthittai | 63 | 3 |
| Thettiyode | 52 | 4 |
| Athencode | 20 | 5 |
| Marthandam | 17 | 6 |

## Nithiravilai Forane

| Parish | Score | Rank |
|---|---|---|
| Varuthattu | 144 | 1 |
| Nithiravilai | 108 | 2 |
| Vayalingarai | 80 | 3 |
| Cheenivilai | 73 | 4 |
| Munchirai | 33 | 5 |
| Christhurajapuram | 25 | 6 |

## Soosaipuram Forane

| Parish | Score | Rank |
|---|---|---|
| Soosaipuram | 135 | 1 |
| Mankarai | 103 | 2 |
| Palappallam | 46 | 3 |
| Fathimapuram | 42 | 4 |
| Thackalivilai | 38 | 5 |
| Killiyoor | 35 | 6 |
| Pilankarai | 32 | 7 |
| Mathapuram | 3 | 8 |

## Thuckalay-Pilankalai Forane

| Parish | Score | Rank |
|---|---|---|
| Kattathurai | 108 | 1 |
| Pilankalai | 104 | 2 |
| Nagercoil | 78 | 3 |
| Paraicode | 59 | 4 |
| Kaisalavilai | 27 | 5 |
| Kalluvilai | 24 | 6 |
| Thuckalay | 15 | 7 |
| NeethiPuram | 11 | 8 |
| Anayadi | 10 | 9 |

இவண்,

சுஜா, அலுவலகச் செயலர்

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**"கிறிஸ்துவின் திரு இரத்தத்தால் குழந்தைகள் மீட்கப்பட்டு, அவருடைய அருளால் குழந்தைகளாகவும், கடவுளின் நண்பர்களாகவும், முடிவற்ற மகிமையின் வழித்தோன்றல்களாகவும் மாறுகிறார்கள்."**
**- திருத்தந்தை பிரான்சிஸ்.**

***ஈசோ மெசியாவில் அன்பார்ந்தவர்களே ,***

2024 டிசம்பர் 1ஆம் தேதி படந்தாலுமூட்டில் வைத்து குழந்தை ஈசோ இயக்கத்தின் சார்பாக ஒரு நாள் கிறிஸ்டின் தியானம் தக்கலை சி.எம்.சி துறவற சபையைச் சார்ந்த அருட்சகோதரிகளின் வழிநடத்துதலுடன் நடைபெற்றது. இத்தியானத்தில் 350 க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர். இது குழந்தைகளின் ஆன்மீக வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் உதவுவதாக அமைந்திருந்தது. கிறிஸ்டின் தியானம் சிறப்பாக நடைபெற உதவி புரிந்த அருட் தந்தையர்கள், ஊக்குவிப்பாளர் அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் சிறப்பாக CMC அருட்சகோதரிகளுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். திருஅவை டிசம்பர் 28 அன்று மாசற்ற குழந்தைகளின் திருநாளைகொண்டாடி வருகின்றது. அதனையொட்டி நமது மறைமாவட்டத்திலும் டிசம்பர் 29 அன்று எல்லா பங்குகளிலும் மாசற்ற குழந்தைகளின் திருநாள் கொண்டாடப்பட்டது. திருப்பலிக்கு குழந்தைகள் வெண்ணிற ஆடை அணிந்து வருகைப்பவனியிலும் காணிக்கை பவனியிலும் கலந்து கொண்டனர். குத்துவிளக்கேற்றுதல், சிறப்பு ஜெபங்கள், குழந்தைகளை வாழ்த்துதல் போன்றவைகளும் நடைபெற்றன. பங்குதந்தையர்கள் குழந்தைகளுக்கு சிறப்பு ஆசீர்வாதமும் வழங்கினர். எல்லா பங்குகளிலும் குழந்தைகள் அனைவரும் மட்டில்லா மகிழ்வுடன் இவ்விழாவினை கொண்டாடினர். குழந்தை செல்வங்களை எல்லா நிலைகளிலும் ஊக்கப்படுத்தி வழிநடத்தி வருகின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இதயம் நிறைந்த நன்றியின் நறுமலர்கள். இறையருள் உங்களில் நிறைவதாக.

இயக்குனர்
அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

***கிறிஸ்மஸ் கொண்டாட்டம்***

இளையோர் இயக்கத்தின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் 2024 டிசம்பர் 15 அன்று வாறுத்தட்டு புனித சவேரியார் ஆலயத்தில் வைத்து 1:30 மணியளவில் பெயர் பதிவுடன் ஆரம்பமானது. விழாவில் தொடக்கமாக இறைவணக்க பாடல் பாடப்பட்டது. தொடர்ந்து நட்சத்திர உருவாக்குதல் போட்டியானது ஆரம்பமானது. 15 குழுக்கள் கலந்து கொண்டன. தொடர்ந்து 'கருத்தும் கானமும்' பாடல் போட்டி நடைபெற்றது. மேலும் 4:30 மணி அளவில்



கிறிஸ்மஸ் நிகழ்வுகள் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சிகளை தொடங்கிவைத்தனர். நடுவண்செயற்குழு உறுப்பினர் செல்வன் சுஜித் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்கள் இவ்விழாவுக்கு தலைமை தாங்கினார்கள். சிறப்பு விருந்தினராக அருட்சகோதரி மேர்ஸி OMMI சிறப்புரையாற்றினார். இடையிடையே இளையோர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் JESUS DREAMZ Music Band இன் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. நடுவண்செயற்குழு உறுப்பினர் செல்வன் அஜித் சிறப்புரை வழங்கினார். கிறிஸ்மஸ் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் வாழ்த்து தெரிவித்து, பரிசுகள் வழங்கினார்.

***கிறிஸ்துமஸ் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களின் விவரம்***

## ‘கருத்தும் கானமும்’ பாடல் போட்டி

| | |
|---|---|
| முதல் பரிசு | புனித குழந்தை தெரசாள் அலகு - பிலாங்காலை |
| இரண்டாம் பரிசு | சிறுமலர் அலகு - மஞ்சாலுமூடு, |
| மூன்றாம் பரிசு | புனித மரியன்னை அலகு - களியல் |

## நட்சத்திர உருவாக்குதல் போட்டி

| | |
|---|---|
| முதல் பரிசு | புனித குழந்தை தெரசாள் அலகு - பிலாங்காலை |
| இரண்டாம் பரிசு | புனித மார்டின் டி போரஸ் அலகு - கழுவன்திட்டை |
| மூன்றாம் பரிசு | தூய தேவமாதா அலகு - கிள்ளியூர் |

***ஆயருடன்...***

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்க இயக்குநர், துணை இயக்குநர் மற்றும் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் இணைந்து டிசம்பர் 22 மாலை 3.00 மணியளவில் தக்கலை ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட ஆயர்



மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களை சந்தித்து கிறிஸ்துமஸ் வாழ்த்து செய்திகளை தெரிவித்துக்கொண்டனர். ஆயர் அவர்கள் அனைவருக்கும் இனிப்பு மற்றும் பரிசு பொருட்களை வழங்கினார். தொடர்ந்து அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடுவண் செயற்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் வீடு சந்திப்பு மற்றும் அலகு சந்திப்பு குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவண்,

**ஜினோ, செயலர்**

# மறை மாவட்ட
# பொதுநிலையினர் பணிக்குழு



பொது நிலையினர் பணிக்குழு சார்பாக நலவாரிய அட்டை விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. நித்திரவிளை பங்கை சார்ந்த சவுமியா, கிரிஸ்டல் வினு ஆகியோருக்கு நலவாரிய அட்டை பெற்று தரப்பட்டது.

இவண்,

திரு. தனசிங், தலைவர்

| BIRTHDAY OF REV. FATHERS- JANUARY - 2025 | |
|---|---|
| Fr. Justin Jose Karuvelil CMI | 16 |
| Fr. Luka Kollamparampil CMI | 17 |
| Fr. Ajin Jose | 17 |
| Fr. Toji Parampilparampil | 18 |
| Fr. Sumesh Valliyamthadathil | 18 |
| Fr. Sanil Panthichirackal | 20 |
| Fr. Jomy Kamukummattathil | 20 |
| Fr. Printo Kurias | 21 |
| Fr. Thomas Pottemparampil MCBS | 23 |
| Fr. Antony Chundelikkatt | 24 |
| Fr. Lijo Thekkel | 24 |
| Fr. Geo Choozhikunnel | 26 |
| Fr. Jomon Mangalamadathil | 26 |

# இல்வாழ்வு இயக்கம்
## தக்கலை மறைமாவட்டம்



Dr. ராபின் அவர்கள் மருத்துவ ஆலோசனைக்காக இல்வாழ்வு இயக்கத்திற்கு வருகை தந்திருந்தார். இல்வாழ்வு இயக்கத்தின் பணியாளர்கள் காரோடு தேவசகாயம் நலவாழ்வு நிலையத்தில் இருக்கும் நோயாளிகளை ஆற்றல்படுத்துவதற்காக சென்றிருந்தனர்.

### *திருமண ஆயத்தப் பயிற்சி*

டிசம்பர் 19, திருமண ஆயத்த வகுப்பு இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து நடைபெற்றது. அன்றையதினம் மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் நிகழ்வைப் பார்வையிட்டு, கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடினார்கள்.

### *உணவு திருவிழா மற்றும் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்*

டிசம்பர் 14, புனித அல்போன்சா கல்லூரியில் வைத்து மாதர் ஜோதிஸ் சார்பாக உணவுத்திருவிழா மற்றும் கிறிஸ்து பிறப்புவிழா கொண்டாட்டம் நடைபெற்றது. உணவுத்திருவிழாவிற்கு சுமார் 170 தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

கிறிஸ்து பிறப்பு விழாவின் போது ஒவ்வொரு பங்கிலுமுள்ள ஊக்குவிப்பாளர்கள்,





பொறுப்பாளர்கள் என சுமார் 150 பேர் கலந்து கொண்டனர். அன்றைய தினம் Smart Christmas திட்டத்தில் சேமித்த பணம் திருப்பி கொடுக்கப்பட்டது.

***பங்கு தளங்களில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்***

டிசம்பர் 22, புனித தோமையார் ஆலயம் முழுக்கோட்டிலும் மற்றும் டிசம்பர் 23, புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரையிலும் மாதர் ஜோதிஸ் தாய்மார்களால்



கிறிஸ்துபிறப்பு விழா கொண்டாட்டம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மறைமாவட்ட இயக்குநர் தந்தை முனைவர் ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்களும் மறைவட்ட இயக்குநர் தந்தை அருட்தந்தை ஜோஸ்வயலில் அவர்களும் கலந்து கொண்டனர்.

இவண்,

திரு. ஜிம்மி தெக்கேகடுமத்தில், இயக்குநர்




# வின்சென்ட்-தே-பவுல் சபை

- படந்தாலுமூடு வட்டார சபையின் டிசம்பர் மாதக்கூட்டமும் கிறிஸ்மஸ் விழாவும் இணைந்து வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தாமஸ் சத்தியநேசன் அவர்கள் கேக் வெட்டி கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார்கள். விழாவில் படந்தாலுமூடு வட்டாரசபை உறுப்பினர்கள் மற்றும் மத்திய சபை பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

- சூசைபுரம் வட்டார சபையின் மாதாந்திர கூட்டமும் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டமும் டிசம்பர் 08, சூசைபுரம் மறைவட்ட ஆலயத்தில் வைத்து ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தந்தை அவர்கள் கேக் வெட்டி கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்து செய்தி வழங்கினார்கள். இதில் வட்டார சபை தலைவர் சகோ. ஜான் அவர்களும் வட்டார சபை பொறுப்பாளர்களும் கிளைச் சபை தலைவர்களும் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

- சூசைபுரம் வட்டார சபையின், மாதாபுரம் புனித தோமையார் பெண்கள் கிளைச்சபையானது நவம்பர் 17, ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் முன்னிலையில் வட்டார சபை தலைவர் சகோ. ஜான் அவர்களால் சிளைச்சபை பார்வையிடப்பட்டது. இதில் கிளைச்சபை தலைவர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

- களியல் புனித மரியன்னை கிளைச்சபை சார்பாக கிறிஸ்துமஸ் விழாவும், உதவி வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

- மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட புனித குழந்தை தெரசா கிளைச் சபையின் புதிய பொறுப்பாளர்கள் பதவியேற்பு டிசம்பர் 22, மஞ்சாலுமூடு வட்டார சபை ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை மார்ட்டின் கண்டம்பறம்பில் அவர்களின் முன்னிலையிலும் மத்திய சபை பொறுப்பாளர் சகோதரர் ஜார்ஜ் அவர்களின் மேற்பார்வையிலும் வட்டார சபை தலைவர் சகோதரர் ஜோஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

- முக்கூட்டுக்கல் திருக்குடும்ப தேவாலத்தில் இயங்கிவரும் ஆண் மற்றும் பெண் வின்செந்தியர்கள் கிறிஸ்மஸ் விழாவை கேக் வெட்டி கொண்டாடினர். பின்னர் 20 ஏழைக் குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி மற்றும் மளிகை பொருட்களும் வழங்கபட்டன.

- படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலய வின்செந்தியர்கள் சார்பாக கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு 12 ஏழைகளுக்கு அரிசி மற்றும் காய்கறிகள் வழங்கப்பட்டன. கிளைச்சபைகளின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தாமஸ் சத்தியநேசன் நிகழ்வை தொடங்கி வைத்து ஆன்மீக உரை நிகழ்த்தினர்கள்.

- பரைக்கோடு கிறிஸ்துஅரசர் ஆலய ஆண்கள் கிளைசபை சார்பில் கிறிஸ்மஸ் விழா மற்றும் நலதிட்ட உதவிகளும் வழங்கபட்டன. நிகழ்வில் பேரருட்தந்தை. ஜோன்சிலால் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

- கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு பிலாங்கலை மகளிர் கிளை சபை சார்பில் டிசம்பர் 23, அன்று 2 ஏழைக்கு நிதி உதவி வழங்கியும் மற்றும் கேக் வெட்டியும் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது.

- மஞ்சாலுமூடு கிளைசபையில் கிறிஸ்து பிறப்பு திருநாளை முன்னிட்டு 5 தத்து குடும்பங்களுக்கு ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை மார்டின் கண்டம்பறம்பில் அவர்களின் தலைமையில் டிசம்பர் 23, பொருள் உதவிகளாக அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகள் ஆகியவை வழங்கப்பட்டன. அனைத்து ஏற்பாடுகளையும் திட்ட அலுவலர் சகோ.ஷாஜி மற்றும் கிளைச் சபை ஆலோசகர் சகோ.வெனீஸ் ஆகியோர் கவனித்து கொண்டார்கள்.

- ஓசானாம் உயர் கல்வி நிலயத்தின் கிறிஸ்து பிறப்பு விழா டிசம்பர் 21, அன்று மத்திய சபை தலைவர் சகோ. றாபி அவர்கள் தலைமையில் துணைத் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. விழாவில்




மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மத்திய சபை பொறுப்பாளர்கள் சகோ. எட்வின்சன், சகோ. லதா, சகோ. ஷாஜி ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

இவண்,

D.P. ஷாஜி, தகவல் தொடர்பாளர்

# மரியாயின் சேனை - தக்கலை கொமித்சியம்

### *23-வது ஆண்டு விழா*

மரியாயின் சேனை தக்கலை கொமீத்சியத்தின் 23ஆவது ஆண்டு விழா டிசம்பர் 7, சனிக்கிழமை புனித அல்போன்சா கல்லூரி கலையரங்கில் வைத்து நடைபெற்றது. காலை 9:30 மணிக்கு சேனையின் ஆரம்ப ஜெபம் மற்றும் ஜெபமாலை சொல்லப்பட்டது. தொடர்ந்து 10 மணிக்கு அருட்தந்தை மிஜோ புத்தம்புரையில் அவர்களால் 'மரியன்னையின் ஆன்மீகம்' என்ற மையச் சிந்தனையில் தியானம் நடைபெற்றது. காலை 11:30 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பரம்பில் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. மதியம் 2 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கொமீத்சிய பொருளாளர் சகோ. பெஞ்சமின் போஸ் அனைவரையும் வரவேற்றார்கள். ஆன்ம இயக்குனர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் 6 கியூரியா ஆன்ம இயக்குனர்களை அறிமுகம் செய்து வைக்க மேதகு ஆயர் அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசும் வழங்கினார்கள். தொடர்ந்து கோட்டார் ரீஜியா தலைவர் சகோ. யூஜின் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் தலைமை உரை ஆற்றினார்கள். ஆன்ம இயக்குனர் வாழ்த்துரை வழங்கினார்கள். இடை இடையே மரியாயின் சேனையாளர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றது. இறுதியில் கொமித்சிய தலைவர் சகோ. தோமஸ் பன்னீர் செல்வம் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். 4.15 மணிக்கு நிகழ்வானது முடிவடைந்தது. நிகழ்ச்சியை செயலர் சகோ.ஷீலா தொகுத்து வழங்கினார்கள்.

### *கியூரியா ஆன்ம இயக்குனர்கள் கலந்துரையாடல்*

தக்கலை கொமித்சியத்தின் கீழ் செயல்படும் ஆறு கியூரியாக்களின் ஆன்ம இயக்குனர்களின் கலந்துரையாடல் கூட்டமானது டிசம்பர் 07, மாலை 4:30 மணிக்கு புனித அல்போன்சா கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் கொமீத்சிய ஆன்ம இயக்குனர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ், படந்தாலுமூடு சகாய மாதா கியூரியா ஆன்ம இயக்குனர் பேரருட்தந்தை தோமஸ் சத்திய நேசன், நித்திரவிளை ஜெய மாதா கியூரியா ஆன்ம இயக்குனர் பேரருட் தந்தை ஜோஸ் முட்டத்துபாடம், மஞ்சாலுமூடு மீட்பரின் தாய் கியூரியா ஆன்ம இயக்குனர் பேரருட்தந்தை மார்ட்டின் கண்டம் பரம்பல், பாலப்பள்ளம் கியூரியா ஆன்ம இயக்குனர் அருட்தந்தை அஜின் ஜோஸ், கோட்டார் ரீஜியா தலைவர் சகோ. யூஜின், தக்கலை கொமீத்சிய தலைவர் சகோ. தோமஸ் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் மரியாயின் சேனை வளர்ச்சி பற்றி பல காரியங்கள் கலந்துரையாடப்பட்டது.

மரியன்னையின் பணியில்
சகோ. ஷீலா, செயலர்

# அருட்தந்தை ஜாண் தெக்கேல் அவர்களின் நினைவு

அருட்தந்தை ஜாண் தெக்கேல் அவர்களின் முதல் நினைவேந்தல் டிசம்பர் 21, மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி ஆலயத்தில் வைத்து மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் திருப்பலியுடன் நடத்தப்பட்டது. பேரருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில், பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல், அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை ஜோஸ் வயலில், மற்றும் அருட்தந்தை வினோத் கானகலில் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.



| FEASTDAYS OF REV. FATHERS - JANUARY 2025 | |
|---|---|
| Fr. Johnsilal Arackaparampil | 03 |
| Fr. Sanil Panthichirackal | 03 |
| Fr. Davis Karukappally | 20 |
| Fr. Justin Cheruvelil | 20 |
| Fr. Mijo Puthenpurayil | 20 |
| Fr. Robin Koorumullil | 20 |
| Fr. Sebastian Pothemparampil MST | 20 |
| Fr. Seby Manimalakandathil | 20 |
| Fr. Shijo Jose Aikkarakunnel | 20 |
| Fr.Joshy Thevalakkara CMI | 20 |

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

***Educare கிறிஸ்துமஸ் மற்றும் கல்வி உதவித்தொகை வழங்குதல்***

Educare திட்டம் வழியாக. தக்கலை மறைமாவட்டத்திலுள்ள ஏழை மாணவர்கள் ஆங்கில புலமை பெறுவதற்கான பயிற்சியை K.K.S.S.S. மேற்கொண்டு வருகிறது. இவர்களுக்கான கிறிஸ்துமஸ் விழா K.K.S.S.S. அரங்கத்தில் வைத்து டிசம்பர் 14ஆம் தேதி நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக K.K.S.S.S இன் புரவலர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் கலந்துக் கொண்டார். அவர் தமது உரையில் இயேசு கிறிஸ்து பிறந்த டிசம்பர் 25ஆம் தேதியை, ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் கிறிஸ்துமஸாக கொண்டாடுகிறோம். இந்த நன்னாளை முன்னிட்டு ஆலயங்களில் துதி பாடி, இசையுடன் அன்பை பரிமாறிக் கொள்கிறோம். பல்வேறு வீடுகளில் கேக் தயாரித்து நமக்கு நெருக்கமானவர்களுக்கு



வழங்குகிறோம். இந்த ஆண்டும் இயேசு பிறந்த தினத்தைச் சிறப்பாக பல ஆண்டுகளாகத் தனித்துவமான முறையில் கொண்டாடி வருகின்ற Educare மாணவர்களுக்கு பாராட்டுக்கள் என்று கூறினார். தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் 55 கல்லூரி மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கான கல்வி உதவித்தொகையை வழங்கினார்கள். நிகழ்வில் K.K.S.S.S இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். குழந்தை இயேசுவின் பிறப்பினைச் சித்தரிக்கும் வகையில் குடில் மற்றும் இயேசு பிறப்பை பற்றிய நாடகம் நடைபெற்றது. நிகழ்வின் இடையிடையே கலைநிகழ்சிகள் நடைபெற்றன. Educare மாணவர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசினை இயக்குநர் தந்தை வழங்கினார்கள். இந்த நிகழ்வுகளை உதவி இயக்குநர் தந்தை

சுபின் புத்தன்புரைக்கல் மற்றும் அருட்சகோதரி சுனிலா ஜோசப் ஆகியோர் ஒருங்கிணைத்தார்கள். இதில் சுமார் 150-க்கிம் மேற்பட்ட மாணவர்களுடன், பெற்றோர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

### *நினைவுத் திருப்பலி*

இறையடி சேர்ந்த, கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் முன்னாள் இயக்குநர் தந்தையர்கள் மற்றும் பணியாளர்களின் நினைவு திருப்பலி டிசம்பர் 23ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் மற்றும் உதவி இயக்குநர் தந்தை சுபின் புத்தன்புரைக்கல் ஆகியோர் இணைந்து கல்லுவிளை, புனித அன்னைத் தெரசா ஆலயத்தில் வைத்து நினைவு திருப்பலி நிறைவேற்றினார்கள்.



அப்போது K.K.S.S.Sஇன் முன்னாள் இயக்குநர்களாக இருந்த அருட்தந்தை வடக்கமுறி, அருட்தந்தை ஜான் தெக்கேல் மற்றும் அருட்தந்தை தோமஸ் தெக்கேல் ஆகியோர் நினைவு கூரப்பட்டனர். இயக்குநர் பேசுகையில், முன்னாள் இயக்குநர்கள் ஏழை மக்களுக்காகவே தங்களது இறுதி மூச்சு வரை உழைத்தார்கள் எனவும் அவர்கள் தக்கலை மறைமாவட்டத்திற்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த குமரிமாவட்ட நலனுக்காவே வாழ்ந்து மறைந்தவர்கள் எனவும் குறிப்பிட்டார். இந்நினைவு திருப்பலியில் K.K.S.S.S. அலுவலகப்பணியாளர்கள், தக்கலை நிதி நிறுவனப் பணியாளர்கள், களப்பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### *SHG – கிறிஸ்துமஸ் விழா*

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின், சுய உதவிக் குழுக்களின் சார்பில் மாறப்பாடி மையத்தில் 6ஆம் தேதியும் தொற்றியோடு மையத்தில் 18ஆம் தேதியும் பாலப்பள்ளம் (சேவிளை) மையத்தில் 21ஆம் தேதியும் தக்கலையில் 24ஆம்

தேதியும் சுய உதவி குழுக்கள் சார்பாக கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. நிகழ்வுகள் மைய இயக்குநர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் கிறிஸ்துமஸ் பஜனை மற்றும் கிறிஸ்துமஸ் தாத்தா போட்டிகளும் நடைபெற்றன. நிகழ்வின் இடையே கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியாக இனிப்புகள் பரிசுப்பொருட்கள் வழங்கி கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர். தக்கலை மையத்தின் சார்பில் 5 குடும்பங்களுக்கு தலா 1000 ரூபாய் மதிப்புள்ள மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

***கிறிஸ்துமஸ் மற்றும் புனித ஜான் பெயர் கொண்ட விழா***

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பணியாளர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் 23-ஆம் தேதி K.K.S.S.S. வளாகத்தில் நடைபெற்றது. கிறிஸ்துமஸ் விழா இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் தனது உரையில் உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 25ஆம் தேதி கிறிஸ்துமஸ் தினம் கோலாகலமாக கொண்டப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளான அன்று அவரை வணங்கி, மக்களிடையே அன்பை பரிமாறப்படுகிறது. இதனை உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது மற்ற மதத்தினரும் கோலாகலமாக கொண்டாடிவருகிறார்கள். வீடுகளில் கிறிஸ்துமஸ் மரம், ஸ்டார் மற்றும் கேக் தயாரிப்பது, அதனை தொடர்ந்து, கிறிஸ்துமஸ் தாத்தா வீடுகளுக்கு வந்து பரிசு தருவது என இப்பண்டிகை வெகுவிமரிசையாக கொண்டாடப்படும் எனவும் கூறினார். டிசம்பர் 27ஆம் தேதி பெயர் கொண்ட திருநாள் கொண்டாடும் உதவி இயக்குநர் தந்தை. சுபின் புத்தன்புரைக்கல் அவர்களுக்கு வாழ்த்து செய்தியும் வழங்கினார். உதவி இயக்குநர் தந்தை சுபின் புத்தன்புரைக்கல் அவர்கள் கிறிஸ்துமஸ் உரையாற்றினார். அப்போது இந்தியாவில் கிறிஸ்துமஸ் விழா சிறப்பாக குமரி மாவட்டத்தில் கொண்டாடப்படுகிறது. சமூகத்தின் நன்மைக்காக நாம் சேவை செய்வதன் மூலம் அனைவரையும் மீட்பதே கிறிஸ்மஸ் நோக்கம். ஒருவரோடொருவர் இரக்கத்துடனும் அன்புடனும் வாழ்வதன் மூலம், கிறிஸ்தவ மதிப்பீடுகளை சமூகத்தில் விதைக்க முடியும். நீங்கள் பிறருக்கு உதவும்போதும் இயேசு உங்கள் இதயக் கூட்டில் பிறப்பார். இந்த கிறிஸ்துமஸ் மகிழ்வைத் தரும் கிறிஸ்துமஸாக மாறட்டும் என்று வாழ்த்தினார். K.K.S.S.S ஆலோசகர் முனைவர் சத்தியதாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இடைஇடையே அலுவலகப் பணியாளர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் K.K.S.S.S குடும்பத்தின் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

**இவண்,**

**அருட்தந்தை எபி பூவத்து மூட்டில், இயக்குநர்**

# அருட்சகோதரர்களிடமிருந்து

**"இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்."(லூக்கா 2: 11.)**

கிறிஸ்துமஸ் விழா நமது அருட்சகோதரர்கள் பயிலும் குருமடங்களில் கொண்டாடப்பட்டது. ரூஹாலயா உயர் குருமடத்தில் டிசம்பர் 1 முதல் 5 வரை வருடாந்திர தியானம் நடைபெற்றது. சிறிய பட்டங்கள் மற்றும் திருத்தொண்டர் அருட்பொழிவு டிசம்பர் 19 அன்று நடைபெற்றது. பத்து அருட்சகோதரர்கள் திருதொண்டர்களாக அருட்பொழிவு பெற்றனர். டிசம்பர் 20 முதல் 25 வரை தத்துவயியல் பயிலும் அருட்சகோதரர்கள் சிலர், மறைதொண்டு தளங்களுக்கும் சிலர் குருமடத்திலும் கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடினர். பிற குருமடங்களில் பயிலும் அருட்சகோதரர்கள் விடுமுறைக்காக மறைமாவட்டம் வந்தனர். டிசம்பர் 23இல் ஆயரோடு இணைந்து அருட்சகோதரர்கள் கிறிஸ்துமஸ் கொண்டாடினர். அவ்வேளையில் அனைவரும் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆயர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்து கூறினார். அருட்சகோதரர்கள் கிறிஸ்துமஸ் விழாவை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆலயங்களில் கொண்டாடினர்.

சகோ. பிபின் & வின்சிலின்

## வரவிருக்கும் நிகழ்வுகள்

ஜனவரி 06-11 - ஆயர்கள் பேரவை.

ஜனவரி 06-12 - சீரோ மலபார் மிஷன் வாரம்.

ஜனவரி 28 – அருட்தந்தையர்கள் கூடுகை.

# மறைமாவட்டச் செய்திகள்

## அருட்தந்தையர்கள் கூட்டம்

ஜூலை 31, 2024 அன்று கூடிய அருட்பணியாளர்கள் பேரவையில் வழங்கிய ஆலோசனைகள் குறித்து விவாதிக்கவும், குருக்களை பற்றிய சுய மதிப்பீடு நடத்தவும் சிறப்பு அருட்தந்தையர்கள் கூட்டம் டிசம்பர் 5 அன்று சங்கமத்தில் நடைபெற்றது. கூட்டமானது ஒரு மணி நேர ஆராதனையுடன் தொடங்கியது. அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலில் மற்றும் அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் ஆகியோர் தலைமையில் "தக்கலை மறைமாவட்டத்தில் தங்கள் வாழ்க்கை மற்றும் பணி பற்றிய அருட்பணியாளர்களின் கவலைகள், சவால்கள் மற்றும் எதிர்நோக்குகள்" என்ற தலைப்பில் குழு விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டது. அறிமுகத்திற்குப் பிறகு, குருக்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, விவாதித்தார்கள். பிறகு மூன்று குழுக்களின் பிரதிநிதிகள் தாங்கள் விவாதிக்கப்பட்டவற்றை பொதுவான அமர்வில் பகிர்ந்து கொண்டனர்.



டிசம்பர் 17 ஆம் தேதி அருட்தந்தையர் ஆயரோடு இணைந்து கிறிஸ்மஸ் கொண்டாடினர்.

## இணைய வழி வினாடி-வினாப் போட்டி

சீரோ மலபார் திருதூது நிலையம் மற்றும் சீரோ மலபார் மறைக்கல்வி ஆணையம் இணைந்து நடத்திய இணைய வழி வினாடி-வினாப் போட்டி டிசம்பர் 14 அன்று நடத்தப்பட்டது. கிறிஸ்துவால் ஒப்படைக்கப்பட்ட திருத்தொண்டு பணியைப் பற்றி ஆழமான புரிதலைப் பெறுவதற்கும், திருத்தொண்டு ஆர்வத்தை வளர்ப்பதற்கும், பல்வேறு திருத்தொண்டு செயல்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் பொதுநிலையினர்களுக்கு ஒரு வாய்ப்பாக இது அமைந்தது. இந்த இணைய வழி வினாடி வினா போட்டி டிசம்பர் 14 அன்று மாலை 6:00 மணிக்கு நடத்தப்பட்டது. போட்டியில் நமது மறைமாவட்டத்திலிருந்து பலர் கலந்து கொண்டனர்.

# மறைவட்டச் செய்திகள்

## சூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

2024-ம் ஆண்டின் மறை மாவட்ட நற்செய்தி பெருவிழாவில் பங்கிலிருந்து திரளான பேர் கலந்து கொண்டனர். டிசம்பர் 2, நிறைவு நாளில் மறைமாவட்டம் சார்பில் வழங்கப்பட்ட மிஷன் ஞாயிறு காணிக்கைக்கான நினைவு பரிசினை கைக்காரர் திரு. ரத்தினமணி, பங்கின் சார்பில் ஆயரிடமிருந்து பெற்றுக் கொண்டார். 25 நோன்பு பங்கில் அனுசரிக்கப்பட்டது. டிசம்பர் 6 தொடங்கி 9 நாட்கள் கிறிஸ்துமஸ் பஜனை பங்கில் நடைபெற்றது. சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரியில் டிசம்பர் 7ல் நடந்த மரியாயின் சேனை ஆண்டு விழாவிலும் டிசம்பர் 14 இல் நடந்த மாதர் ஜோதிஸ் கிறிஸ்மஸ் விழாவிலும்




பங்கில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். டிசம்பர் 15ல் வாறுதட்டில் நடந்த இளையோர் இயக்க கிறிஸ்துமஸ் விழாவில் இளையவர்கள் பங்கேற்றனர். பங்கு இளையோர் தலைமையில் அழகிய கிறிஸ்துமஸ் குடில் அமைக்கப்பட்டு டிசம்பர் 23 மாலையில் அருட்தந்தை. அஜின் ஜோஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கிறிஸ்மஸ் விழா டிசம்பர் 24 இரவு 10:30 மணிக்கு திருப்பலி, பவனி, குழந்தைகளின் நடனம், கிறிஸ்துமஸ் கேக் முறித்தல், தேநீர் வழங்குதல் போன்ற நிகழ்வுகளோடு சிறப்பாக நடைபெற்றது. டிசம்பர் 22 காலை திருப்பலியைத் தொடர்ந்து இவ்வாண்டும் வழக்கம்போல அனைத்து குடும்பங்களுக்கும் கிறிஸ்துமஸ் கேக் வழங்கப்பட்டது. 2025 யூபிலி முன்னிட்டு

டிசம்பர் 29 இல் நாகர்கோயில் புனித அல்போன்சா திருத்தலத்தில் நடைபெற்ற புனித வாசல் திறப்பு நிகழ்வில் பங்கின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அன்றைய தினம் பங்கில் மாசில்லா குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. SABS துறவற சபையின் தமிழ் மண்டல தேர்தலில் எம் பங்கு கன்னியர் இல்ல தலைவி அருட்சகோதரி அமலா SABS அவர்கள் கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

### பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்

பாத்திமா அன்னை ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு திருநாளை முன்னிட்டு




தினமும் ஆலயத்தில் திருப்பலி நடைபெற்றது. டிசம்பர் 24, இரவு அருட்தந்தை மேத்யூ தெற்கேகூற்று அவர்களால் ஆடம்பரத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியின் இடையில் குழந்தை இயேசுவை ஏந்தி பவனி நடைப்பெற்றது. திருப்பலி முடிந்த பிறகு கிறிஸ்துமஸ் கேக் வெட்டிக் கொடுக்கப்பட்டது. இதில் அனைத்து பங்கு மக்களும் கலந்து கொண்டனர். டிசம்பர் 28, மாசில்லா குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. டிசம்பர் 29, பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ் அவர்களால் ஆடம்பரத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்றைய தினம் இரு குழந்தைகள் முதல் திருவிருந்து பெற்றுக் கொண்டார்கள். டிசம்பர் 31, இரவு ஆராதனை மற்றும் புத்தாண்டு திருப்பலி நடைபெற்றது. திருப்பலி முடிந்த பிறகு கேக் வழங்கப்பட்டது.

### புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

டிசம்பர் 08, வாறுத்தட்டு ஆலய திருவிழாவிற்கு பங்கு மக்கள், அருட் சகோதரிகள் என மொத்தம் 25 பேர் சென்றனர். டிசம்பர் 19, மாலை 6.00 மணிக்கு திருப்பலி அதை தொடர்ந்து நற்கருணை ஆராதனை பாவசங்கீர்த்தனம்

நடைபெற்றன. 22 ஆம் தேதி மறைக்கல்வி முடிந்தவுடன் ஆசிரியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. டிசம்பர் 24, இரவு 9.00 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலியை சிறப்பிக்க மறைமாவட்ட ஆயர் மார் இராஜேந்திரன் அவர்களும், அருட்தந்தை லிஜோ அவர்களும் வந்தார்கள். இவர்களோடு இணைந்து



அருட்தந்தை லின்றோ அவர்களும் இணைந்து மூவராக கூட்டு திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். ஆயர் அவர்களால் கேக் வெட்டப்பட்டது. பின் இளையோர்கள் சார்பாக மரவிழா நடைபெற்றன. டிசம்பர் 25, பங்குத்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களது முயற்சியாலும், பங்கு மக்களின் ஒத்துழைப்புடனும் ஆலயத்தின் உள்ளே சீலிங் போட்டு புதிய மின் விளக்கு மற்றும் மின்விசிறிகள் போடப்பட்டு பெயிண்ட் அடித்து ஆலயம் சுற்றி ஜல்லி போட்டு சரி செய்யப்பட்டது. டிசம்பர் 29, மாசில்லா குழந்தைகள் விழா கொண்டாடப்பட்டது. முன்னுரை குழந்தை ஈசோ இயக்க பிள்ளைகள் 5 பேர் வாசித்தனர். பின் குத்துவிளக்கு ஏற்றி திருப்பலியில் காணிக்கை பவனி இறுதியில் தந்தை அவர்களால் குழந்தைகள் தலையில் கை வைத்து ஜெபித்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டன.

### ▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

டிசம்பர் 02, படுக்கை நோயாளிகளின் இல்லங்களுக்கு பங்குத்தந்தை அருட்தந்தை டோஜி அவர்களால் பாவசங்கீர்த்தனம் மற்றும் நற்கருணை வழங்கப்பட்டன. டிசம்பர் 21, மாலை 5.30 மணிக்கு திருப்பலி அதை தொடர்ந்து அருட்தந்தை அனில் ராஜ் தலைமையில் பாவமன்னிப்பு உரை மற்றும் நற்கருணை ஆராதனை பாவசங்கீர்த்தனம் நடைபெற்றன. மறைக்கல்வி முடிந்தவுடன் ஆசிரியர்களுக்கான கூட்டம் அருட்தந்தை டோஜி தலைமையில் நடைபெற்றது. மாதர் ஜோதிஸ் சார்பாக முஞ்சிறை முதியோர் இல்லம் சந்திக்க பங்குத்தந்தை தலைமையில் மொத்தம் 24 பேர் சென்றனர். டிசம்பர் 23, மாலை 5.30 மணிக்கு கன்னியர்



இல்லத்தில் வைத்து மாதர் ஜோதிஸ் உறுப்பினர்களுக்கு கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. மறைமாவட்ட இயக்குநர் தந்தை ஜிம்மி கடுமத்தில் அருட்தந்தை டோஜி தமிழ் நாடு மாகாண தலைவி மதர் ரோஸ் மார்ட்டின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். 32 தாய்மார்கள் கலந்து கொண்டு கலைநிகழ்ச்சிகள் சிறப்புரை பரிசுகள் வழங்கி கேக் முறித்து செய்து இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டன. டிசம்பர் 28, அருட்தந்தை டோஜி தலைமையில் 3 பேருக்கு திருமுழுக்கு மற்றும் உறுதி பூசுதல் வழங்கப்பட்டன. டிசம்பர் 29, இல் 3 பேருக்கு முதல் திருவிருந்து வழங்கப்பட்டன.

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம்: சூசைபுரம்

நற்கருணை ஆராதனை சபை கன்னியர்களுக்கு சொந்தமான புனித அல்போன்சா விடுதியில் வைத்து டிசம்பர் 6 மற்றும் 7 ம் தேதிகளில் நடத்திய 40 மணி நேர நற்கருணை ஆராதனையில் பங்கு மக்கள் கலந்து கொண்டனர். கிறிஸ்துமஸ் பஜனை பாடல்கள் டிசம்பர் 07 முதல் டிசம்பர் 24 வரை பங்கின் அனைத்து வீடுகளிலும் பாடப்பட்டது. டிசம்பர் 08, மரியன்னையின் அமலோற்பவ திருநாளை முன்னிட்டு காலை 9 மணி முதல் மாலை 5.15 மணிவரை ஆலயத்தில் வைத்து அனைத்து உறவிய இறை மக்களாலும் ஜெபமாலை சொல்லி ஜெபிக்கப்பட்டது. டிசம்பர் 12, அன்று மாலை திருப்பலிக்கு பின்னர் அருட்தந்தை மிஜோ அவர்கள் தலைமையில் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் டிசம்பர் 07, நடைபெற்ற மரியாயின் சேனை ஆண்டு விழாவிலும் டிசம்பர் 14, நடைபெற்ற மாதர் ஜோதிஸ் இயக்கத்தினரின் கிறிஸ்துமஸ் விழாவிலும் பங்கிலிருந்து பெரும்பாலானோர் கலந்து கொண்டனர். டிசம்பர் 14, அன்று மாலை கருங்கல் வட்டார ஐக்கிய

கிறிஸ்தவ பேரவையினர் சார்பில் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மார் வின்சென்ட் பவுலோஸ் அவர்கள் தலைமையில் ஏழைகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது. டிசம்பர் 15, அன்று வாறுதட்டில்




வைத்து நடைபெற்ற இளையோர் இயக்க கிறிஸ்துமஸ் விழா போட்டிகளிலும் கொண்டாட்டத்திலும் எம் பங்கின் இளையோர்கள் கலந்து கொண்டனர். டிசம்பர் 16, அன்று திருப்பலிக்கு பின்னர் பங்கு தந்தை பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்களுக்கு பங்கு மக்கள் அனைவரும் சார்பிலும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டமானது டிசம்பர் 24, இரவு 11 மணிக்கு பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. திருப்பலி முடிந்தவுடன் இளையோர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குடில் பங்குத்தந்தை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் உறவிய மக்கள் இணைந்து நடத்திய கிறிஸ்துமஸ் பஜனை பாடல்கள், மறைக்கல்வி குழந்தைகளின் நடனங்கள், குடில் காட்சிகள் ஆகியவை நடைபெற்றன. டிசம்பர் 29 அன்று, மாசில்லா குழந்தைகளின் திருவிழா திருப்பலி குழந்தை ஈசோ இயக்க குழந்தைகளால் சிறப்பிக்கப்பட்டது. டிசம்பர் 30, ஆலய வளாகத்தில் மறைவட்ட மறைக்கல்வி மாணவர்களுக்கான கலை விழா போட்டிகள் நடைபெற்றது. இதில் எமது மறைக்கல்வி நிலைய மாணவர்கள் 135 புள்ளிகள் பெற்று மறைவட்ட அளவில் முதலிடம் பெற்றனர். டிசம்பர் 31, இரவு 11 மணிக்கு ஆண்டு இறுதி ஆராதனை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது.

# படந்தாலுமூடு

## திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

டிசம்பர் 07, நடைபெற்ற மரியாயின் சேனை ஆண்டு விழாவில் மரியாயின் சேனை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். டிசம்பர் 11 முதல் டிசம்பர் 23 வரை பஜனை நடைபெற்றது. டிசம்பர் 14, மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக நடைபெற்ற உணவு திருவிழா மற்றும் கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டத்தில் மாதர் ஜோதிஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். டிசம்பர் 15, அன்று கிறிஸ்மஸ் விழா மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. டிசம்பர் 15, கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு இறை மக்களை தயாரிக்கும் விதமாக திருப்பலிக்கு பின் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. டிசம்பர் 24, கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி இரவு 10 மணிக்கு நடைபெற்றது. டிசம்பர் 31, அன்று மறைவட்ட அளவில் நடைபெற்ற மறைக்கல்வி மாணவர்களுக்கான போட்டியில் மறைவட்ட அளவில் முதலிடம் பெற்றனர். டிசம்பர் 31, வருட பிறப்பை முன்னிட்டு இரவு 9:30 மணி முதல் 10 மணி வரை நற்கருணை ஆராதனையும் அதனை தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது.

## புனித பவுல் ஆலயம் தெற்றியோடு

டிசம்பர் 08, பங்கு பேரவைக் கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்தில் புதிய கைகாரர்கள் உறுதிமொழி எடுத்து பொறுப்பேற்றார்கள். டிசம்பர் 24, அன்று உறவியங்களுக்கிடையான குடில் போட்டி நடைபெற்றது.

## புனித மரிய கொரற்றி ஆலயம் அதங்கோடு

டிசம்பர் 14, மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக நடைபெற்ற உணவுத்திருவிழா மற்றும் கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டத்தில் மாதர் ஜோதிஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் டிசம்பர் 24, இரவு 10 மணிக்கு நடைபெற்றது. டிசம்பர் 29, அன்றைய நாள் திருப்பலியானது மாசற்ற குழந்தைகளின் திருவிழா திருப்பலி ஆக நிறைவேற்றப்பட்டது. குழந்தை ஈசோ இயக்க குழந்தைகள் காணிக்கை பவனியுடன் திருப்பலியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். டிசம்பர் 31, வருட பிறப்பை முன்னிட்டு இரவு 10 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

## நித்திரவிளை

### புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

பங்கு பாதுகாவலரின் திருவிழாவானது டிசம்பர் ஒன்றாம் தேதி முதல் எட்டாம் தேதி வரை மிக சிறப்பாக நடைபெற்றது. டிசம்பர் 14, மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் சார்பாக மறை மாவட்ட அளவில் நடத்தப்பட்ட உணவுத் திருவிழா போட்டியில் எம் பங்கின் மாதர் ஜோதிஸ் இயக்க தாய்மார்கள் கலந்து கொண்டார்கள். டிசம்பர் 15, மறை மாவட்ட அளவில் இளையோர்களுக்கான கிறிஸ்துமஸ் போட்டிகள் மதியம் 1:30 மணிக்கு எம் பங்கில் வைத்து நடைபெற்றன. மாலை 4 மணிக்கு கலை நிகழ்வுகள் மற்றும் பரிசு வழங்குதல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் அடிகளார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். டிசம்பர் 20, மாலை 6:00 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து கிறிஸ்து பிறப்பு திருவிழாவிற்கு தயாரிப்பாக தியான உரை, நற்கருணை ஆராதனை மற்றும் பாவ சங்கீர்த்தனம் நடைபெற்றது. இவ்வருட பஜனையானது டிசம்பர் 12 தொடங்கி டிசம்பர் 22 முடிய உறவியங்கள் வாரியாக பாடப்பட்டது. டிசம்பர் 12 முதல் டிசம்பர் 28 வரை ஒவ்வொரு நாளும் மாலை 5 மணி முதல் 5. 30 மணி வரை கன்னியர் இல்லத்தில் வைத்து குழந்தை ஈசோ பிள்ளைகளுக்காக கிறிஸ்துமஸ் ஜெபம் மற்றும் இறை வார்த்தைகளை குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்து அருட்கன்னியர்கள் வழி நடத்தினார்கள். இறுதி நாளாகிய 23ஆம் தேதி கிறிஸ்துமஸ் விழா மற்றும் பரிசு வழங்குதல் போன்ற நிகழ்வுகள் கன்னியர் இல்லத்தில் நடைபெற்றது. அதன் பிறகு நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. டிசம்பர் 24, கிறிஸ்து பிறப்பு திருவிழா திருப்பலி இரவு 10 மணிக்கு நடைபெற்றது. டிசம்பர் 28, மறைவட்ட அளவிலான மறைக் கல்வி மாணவர்களின் விவிலியக் கலை விழாப் போட்டி கிறிஸ்துராஜபுரத்தில் நடைபெற்றது. போட்டிகளில் மறைக்கல்வி மாணவ- மாணவியர் கலந்து கொண்டு மறைவட்ட அளவில்



முதலிடம் பெற்றனர். டிசம்பர் 29, திருப்பலி மாசற்ற குழந்தைகளின் திருவிழாத் திருப்பலியாக நிறைவேற்றப்பட்டது. குழந்தை ஈசோ இயக்க குழந்தைகள் காணிக்கை பவனியுடன் திருப்பலியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாலை 4 மணிக்கு பங்கு பேரவை கூட்டம் பங்கு தந்தை. அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் தலைமையில் ஆலயத்தில் நடைபெற்றது. பங்கு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ஆலய தந்தையர் இயக்கத்தின் 2025 ஆம் ஆண்டு முதல் நிகழ்ச்சியாக தோலடி காருண்யா மனநல காப்பகத்திற்கு சென்று 1-1- 2025-ம் தேதி மதிய உணவு வழங்கப்பட்டது.

## புனித ஜார்ஜியார் திருத்தலம் – முன்சிறை

டிசம்பர் 10 முதல் 18 நாட்கள் வரை இளையோர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் பஜனை நடைபெற்றது. 22ஆம் தேதி மறைக்கல்வி மாணவ மாணவிகள் சார்பில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. அருட்தந்தை அனில்ராஜ் அடிகளார் தலைமை தாங்கி வாழ்த்து கூறி கேக் முறித்து அனைவருக்கும் இனிப்பு வழங்கி மகிழ்ந்தார். இடையிடையே மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. 24ஆம் தேதி இரவு 11 மணிக்கு கிறிஸ்து பிறப்பு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. டிசம்பர் 29, “கிறிஸ்து யூபிலி 2025" இன் தொடக்க விழா தக்கலை மறைமாவட்டத்தில் மூன்று திருத்தலங்களில் ஒன்றான முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் கொண்டாடப்பட்டது. மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையேற்று திருப்பலி ஒப்புக்கொடுத்து யூபிலியின் நோக்கங்களான 'கிறிஸ்துவை கொண்டாடுதல், திருச்சபையை கொண்டாடுதல் மற்றும் நம்பிக்கை கொண்டாடுதல்' என்ற மைய சிந்தனைகளின் அடிப்படையில் மறையுரையாற்றி ஜெபித்தார்கள். நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டம் சார்ந்த பங்கு பிரதிநிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அதன் பின் ஆயர் அவர்கள் புதுப்பிக்கப்பட்ட சமூக நலக்கூடம் அர்ச்சித்து திறந்து வைத்தார்கள். பின் அனைவருக்கும் அன்பின் விருந்து பரிமாறப்பட்டது. டிசம்பர் 31, இரவு 11 மணி முதல் ஒரு மணி நேர நற்கருணை ஆராதனையும் நள்ளிரவு 12 மணிக்கு புது வருட ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது.

## ▶ ஜெய மாதா ஆலயம் – நித்திரவிளை

புனித வின்சென்ட் தே பவுல் இயக்கம் சார்பில் நித்திரவிளை வட்டரா சபையின் கிறிஸ்மஸ் விழா கொண்டாட்டம் டிசம்பர் 15, மதியம் 1.30 மணி அளவில் வட்டார ஆன்மீக இயக்குனர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. வட்டாரத்திற்குட்பட்ட எல்லா கிளைச்சபைகளிலிருந்தும் உறுப்பினர்கள் பங்கு கொண்டனர். டிசம்பர் 15, சிட்டி

கரோல் என்ற ஒரு அருமையான நிகழ்வு நித்திரவிளை சந்திப்பில் கிறிஸ்துராஜபுரம் மற்றும் நித்திரவிளை பங்கு மக்கள் இணைந்து வழிநடத்தினர். 24ஆம் தேதி கிறிஸ்மஸ் விழா சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. டிசம்பர் 31, இரவு ஒரு மணி நேர நற்கருணை ஆராதனையும் நள்ளிரவு 12 மணிக்கு புது வருட ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது.

### ▶ புனித அமல மரியா ஆலயம் – சீனிவிளை

புனித அமல மரியா ஆலயத்தில் டிசம்பர் 24, கிறிஸ்மஸ் விழா திருப்பலியும் அதன் முடிவில் உறவியங்கள் வாயிலாக கரோல் போட்டியும் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கி வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டது. 29 ஆம் தேதி மாசற்ற குழந்தைகள் தினம் குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக கொண்டாடப்பட்டது. குழந்தைகள் அனைவருக்கும் பரிசு வழங்கப்பட்டது.

### ▶ புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை

புனித அந்தோனியார் ஆலயம் வயலங்கரையில் 24 ஆம் தேதி இரவு கிறிஸ்மஸ் தினம் திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்கள். இறுதியில் அனைவருக்கும் வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டன. 29ஆம் தேதி மாசற்ற குழந்தைகளின் திருநாள் கொண்டாடப்பட்டது. அனைத்து மழலைகளும் திருப்பலியில் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு அனைவருக்கும் பரிசு பொருள்கள் வழங்கி பாராட்டப்பட்டனர்.

## தக்கலை – பிலாங்காலை

### ▶ புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

10 நாட்கள் திருவிழா நடைபெற்றது. ஆலய அர்ச்சிப்பின் 2 வது வருட நிறைவு விழா கொண்டாடப்பட்டது.

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

கிறிஸ்துமஸ் விழா திருப்பலி நடைபெற்றது. புல் குடில் அமைக்கப்பட்டது.

### ▶ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலியை தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது. கிறிஸ்துமஸ் விழா பங்கு பேரவை மற்றும் அனைத்து உறவியங்களிலும் கொண்டாடப்பட்டது. பங்குதந்தை கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு வீடுகளில் உள்ள நோயாளிகளை சந்தித்து பாவசங்கீர்த்தனம் கொடுத்து நற்கருணை வழங்கினார். கிறிஸ்துமஸ் திருப்பலி டிசம்பர் 24 , இரவு 11.30 மணிக்கு நடைபெற்றது.திருப்பலி முடிந்த உடன் அனைவருக்கும்

கேக் வழங்கப்பட்டது. தொடர்ந்து 7 உறவியங்களுக்கு இடையேயான பஜனை பாடல் போட்டி நடைபெற்றது. ஆலய அர்ச்சிப்பின் 7 வது வருட நிறைவு விழா கொண்டாடப்பட்டது. 9 நாட்கள் கிறிஸ்துமஸ் பஜனை நடைபெற்றது. கிறிஸ்துமஸ் விழாவிற்கு ஆயத்தமாக 21ஆம் தேதி ஆலயத்தில் மாலையில் திருப்பலியை தொடர்ந்து ஆராதனை மற்றும் பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது. இளைஞர்கள் சார்பில் குடில் அமைக்கப்பட்டது. புனித கன்னி மரியாவின் அமலோற்பவ திருநாள் அன்று இரவு ஜெபமாலை பவனி நடைபெற்றது. மாசில்லா குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. மிஷன் லீக் மாணவர்கள் சார்பில் செய்த greetings card பவனியாக வந்து பங்குதந்தையிடம் செலுத்தி ஆசி பெற்றனர்.

## மஞ்சாலுமூடு

### புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு

டிசம்பர் 27, நடைபெற்ற மறை வட்ட அளவிலான போட்டிகளில் மறைக்கல்வி




மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர். முழுக்கோடு புனித தோமையார் ஆலய மறைக்கல்வி மறை வட்ட அளவில் இரண்டாவது இடம் பெற்றது. டிசம்பர் 29 அன்று மாசில்லா குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது.

### திருச்சிலுவை ஆலயம் மாலைக்கோடு

டிசம்பர் 29, அன்று திருச்சிலுவை ஆலயம் மாலைகோடு கிறிஸ்து யூபிலி 2025 இன் திருத்தலமாக உயர்த்தப்பட்டு ஜூபிலி விழா தொடங்கப்பட்டது. இவ்விழாவில் குருகுல முதல்வர் மற்றும் மஞ்சாலுமூடு மறைவட்ட அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் மறைவட்டத்திற்குட்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

### புனித குழந்தை தெரசா ஆலயம் மஞ்சாலுமூடு

மிஷன் ஞாயிறு காணிக்கை ஏலம் ஆகியவை வாயிலாக கிடைக்கப்பெற்ற ரூபாய் 36000 மறைமாவட்டத்தில் கொடுக்கப்பட்டது மறைமாவட்ட அளவில் அதிக காணிக்கை கொடுத்த இரண்டாம் இடத்திற்கான பதக்கம் மஞ்சாலுமூடு ஆலயத்திற்கு கிடைத்தது.

### தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம்–தெற்றிவிளை

டிசம்பர் 07, புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற மரியாயின் சேனை ஆண்டு விழாவில், மரியாயின் சேனை உறுப்பினர்கள் பங்கேற்றனர். டிசம்பர் 14, புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற மாதர் ஜோதிஸ் கிறிஸ்துமஸ் விழாவிலும் போட்டிகளிலும் உறுப்பினர்கள் பங்கேற்றனர். டிசம்பர் 15, அன்று வாறுதட்டில் வைத்து நடைபெற்ற இளையோர் இயக்க கிறிஸ்துமஸ் விழா போட்டிகளிலும் கொண்டாட்டத்திலும் எம் பங்கின் இளையோர்கள் கலந்து கொண்டனர். டிசம்பர் 24, ஆலயத்தில் கிறிஸ்துமஸ் விழா மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. டிசம்பர் 27, மறைக்கல்வி பிள்ளைகளுக்கான மறைவட்ட அளவிலான போட்டிகள் நடைபெற்றது, அதில் மறைக்கல்வி பிள்ளைகள் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர். டிசம்பர் 29 மாலைக்கோடு பங்கில் நடைபெற்ற ஜூபிலி தொடக்க விழாவில் எமது பங்கிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு டிசம்பர் மாதம் 5ஆம் தேதி முதல் எல்லா வீடுகளிலும் பஜனை பாடப்பட்டது. மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் டிசம்பர் 22



ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் அருட்பணி ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மறைக்கல்வி மாணவர்களுக்கான, கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை தயாரித்தல் போட்டியானது நடைப்பெற்றது. மாணவர்கள் வீடுகளிலிருந்து தாங்கள் தயாரித்து கொண்டு வந்த வாழ்த்து அட்டைகளை ஆலயத்தில் ஒப்படைத்தனர். கிறிஸ்து பிறப்பு திருப்பலியானது டிசம்பர் 24 அன்று இரவு 10.30 மணியளவில் ஆரம்பமானது. திருப்பலி மற்றும் திருப்பவனிக்கு பின் மாணவர்கள் மற்றும் இளையோர்களின் கலை நிகழ்ச்சிகளும், போட்டிகளுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டது. டிசம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை மாசற்ற மழலையர்தினம் குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக கொண்டாடப்பட்டது. அனைத்து குழந்தைகளும் மிகவும் விமரிசையாக காணிக்கை பவனி மற்றும் விவிலியம் வாசித்து திருப்பலியை சிறப்பித்தனர். தொடர்ந்து பங்குதந்தை அருட்பணி ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் கேக் வெட்டி சிறப்பாக நிகழ்வுகள் அமைந்தது. அனைத்து ஏற்பாடுகளும் இயக்கத்தின் பொறுப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர். அன்றைய தினம் மிஷன்லீக் இயக்கம் சார்பாக ஏழைக்குடும்பங்களுக்கு உதவும் வகையில் நன்மையின் மரம் நிகழ்வினால் கிடைத்த பொருட்களை 13 ஏழைக்குடும்பங்களுக்கு கொடுத்து உதவினர்.

**ராமநாதபுரம் மறைபரப்பு தளம்**

ராமநாதபுரம் மாவட்டம் வேதாளை தேவாலய கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் 21, மிக சிறப்பாக அருட்தந்தை.மாத்யூ குழிஞ்சாலில் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.



## தென்காசி மறைத்தள செய்திகள்

### புனித அமலோற்பவ அன்னை மறைத்தளம் திருவிழா தென்காசி

2024 டிசம்பர் மாதம் 6,7,8 ஆகிய மூன்று நாட்களில் மறைத்தளத்தின் திருவிழாவானது மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம்

தூய மரியன்னை ஆலயம் வாஞ்சிநகர் மற்றும் புலரி சமூக சேவை மையம் இணைந்து டிசம்பர் 15ஆம் தேதி வாஞ்சி நகர் ஆலயத்தில் வைத்து கிறிஸ்து பிறப்பு விழாவினை சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர். பிற்பகல் 11 மணி அளவில் கிறிஸ்மஸ் போட்டிகள் பங்களவில் நடத்தப்பட்டது. மதியத்திற்கு பின்பு பிற சமுதாயத்தை சேர்ந்த மக்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டது. தொடர்ந்து குடில் போட்டிகள் மற்றும் உணவுத் திருவிழா போட்டிகளும் நடத்தப்பட்டன. இறுதியில் பல்சமய கூட்டம் நடைபெற்றது. அருட்பணி ஜான் ஜோசப் அவர்கள் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக பிரானூர் ஊராட்சி தலைவி திருமதி ஆவுடை அம்மாள், ரப்பானியப்பா, அரபிக் கல்லூரி முதல்வர் திரு. எம் எஸ் சம்சுதீன் ஒலிவிப்பு, இந்து கிராம கோவில் பூசாரி சங்கத் தலைவர் திரு. சக்தி கணேசன் மற்றும் அருட்சகோதரி இம்மானுவேல் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். போட்டியில் கலந்து

கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. கரோல் பாட்டு போட்டியில் பங்களவில் சுந்தரபாண்டியபுரம் ஆலய மக்கள் முதல் பரிசையும் மேக்கரை ஆலயம் இரண்டாம் பரிசையும் வாஞ்சி நகர் ஆலயம் மூன்றாவது



பரிசையும் பெற்றனர். குடில் போட்டியில் புளியரை ஆலயம் முதல் பரிசையும் மேக்கரை ஆலயம் இரண்டாவது பரிசையும் புதூர் ஆலயம் மூன்றாவது இடத்தையும் பெற்றனர். உணவு திருவிழாவிலும் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. அருட்பணி ஆன்றணி மகேஷ் அவர்கள் அனைத்தையும் பொறுப்பேற்று தகுந்த தயாரிப்புடன் நல்முறையில் விழாவினை சிறப்பித்தார். பிற சமுதாயத்தை சேர்ந்த திரளான மக்களும் இதில் பங்கு பெற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.




## மாற்றுத்திறனாளிகள் பள்ளிக்கூடம் வாஞ்சி நகர்

சிஎம்சி வாஞ்சிநகர் இல்லத்தோடு சேர்ந்து நடத்தப்படுகின்ற பள்ளிக்கூடத்தில் டிசம்பர் 16ஆம் தேதி கிறிஸ்மஸ் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.



அருட்தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் வாழ்த்துக்கள் கூறி பரிசுகள் வழங்கினார். பொறுப்பாளர் அருட்சகோதரி ஏஞ்சல் சி.எம்.சி. மற்றும் அருட்சகோதரி செலிகொரின் ஆகியோர் இணைந்து விழாவினை சிறப்பித்தனர்.

## அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டம்

டிசம்பர் 16 ஆம் தேதி புலரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடத்தில் வைத்து அருள் பணியாளர்கள் மற்றும் அருள் கன்னியர்களுக்கான கூடுகை மற்றும் கிறிஸ்துமஸ் விழா நடைபெற்றது. ஆயர் அவர்கள் வருகை தந்து கூடுகையை சிறப்பித்தார். ஜெபமாலையுடன் கூடுகையானது ஆரம்பமானது. அதன் பின்பு ஒருவருக்கொருவர் கிறிஸ்மஸ் விழா பரிசுகளை கைமாறினர். தொடர்ந்து ரம்சா மாலை ஜெபம் மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. ஆயர் அவர்களின் இறுதி ஆசீருடன் கூடுகையானது நிறைவுற்றது.

### புலரி சமூக சேவை

புலரி சமூக சேவை நிலையத்தில் டிசம்பர் மாதம் 23ஆம் தேதி புலரி அலுவலக களப்பணியாளர்களுக்கான கிறிஸ்மஸ் கொண்டாட்டம் நடைபெற்றது. பார்டர் பஞ்சாயத்து உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார் அருட்தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் கிறிஸ்துமஸ் செய்தி வழங்கி, கிறிஸ்துமஸ் பரிசுகள் வழங்கினார்.

## மாலை நேரக் கல்வி

மாலை நேர கல்வியில் உள்ள மாணவர்களுக்கான கிறிஸ்துமஸ் விழாவானது 23ஆம் தேதி மாலை நேரத்தில் நடைபெற்றது. பார்டர் மற்றும் அருகாமையில் உள்ள பிரானூர் கிராம குழந்தைகளையும் ஒன்றிணைத்து கிறிஸ்துமஸ் விழா மிகச் சிறப்பாக கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது.

## இளையோர் இயக்கம்

இளையோர் இயக்கம் சார்பாக அடைக்கல ஆராதனை சிறப்பு ஜெபம் ஆனது டிசம்பர் மாதம் 29ஆம் தேதி பார்டரில் வைத்து நடத்தப்பட்டது. மதியம் 3.30 மணி

அளவில் ஜெபத்துடன் ஆரம்பமானது. அருட்தந்தை ஜான் ஜோசப் அவர்கள் மாலை நேர வகுப்பில் பங்கெடுக்கின்ற குழந்தைகளை உற்சாகமூட்டும் அளவில் வகுப்புகளை நடத்தினார். தொடர்ந்து ஆராதனையானது நடைபெற்றது. ஏறக்குறைய 50 க்கும் மேற்பட்ட இளையோர் மற்றும் பங்கு மக்கள் இவ் ஆராதனையிலும் சிறப்பு ஜெபத்திலும் பங்கு பெற்று இறை ஆசீர் பெற்று சென்றனர்.

## வாஞ்சி ஆலய வெள்ளி விழாவின் தொடக்க விழா

வாஞ்சி ஆலயத்தின் வெள்ளி விழாவின் தொடக்க விழாவானது 2024 டிசம்பர் 31 இரவு 11 மணியளவில் புத்தாண்டு திருப்பலியோடு இணைந்து சிறப்பிக்கப்பட்டது. முன்னாள் பங்குத்தந்தை அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றினார். அருட்தந்தை விக்டர் ஆன்டனி ராஜ் எஸ் டி பி அவர்கள் மறையுறை வழங்கினார். அதன் பின்பு வெள்ளி விழாவின் விளக்கை முன்னாள் மறைப்பணி ஆற்றிய அருட்சகோதரி லினட் அவர்கள் திரி ஏற்றி வெள்ளிவிழாவை துவங்கிவைத்தார்.

## லாலா குடியிருப்பு – கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

லாலா குடியிருப்பில் கிறிஸ்மஸ் விழாவானது அருட்தந்தை ஆன்டணி மகேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

# MONTHLY AGENDA – JANUARY 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | | Happy New Year 2025 |
| 2 | Thu | 09.15 am | Ordination of Dn. Amento @ Thannikandam, Idukki |
| 3 | Fri | <br>10.00 am | VC : Adoration for Vocation of Manjalummoodu Forane<br>SINAI : Retreat @ Vattakottai |
| 4 | Sat | 10.00 am<br>10.00 am | CML : International Executive Committee Meeting<br>KII : Committee meeting @ Kalluvilai |
| 5 | Sun | 02.00 pm<br>02.00pm<br>03.00 pm<br>03.00 pm | KKSSS : Gatekeeping training program @ Paraicode<br>LC : Central Council Meeting @ Kalluvilai<br>SMYM : Central Team meet<br>SVP : CC Meeting |
| 7 | Tue | 10.00 am | AI : Intercessory Prayer @ Kalluvilai |
| 10 | Fri | 10.00 am<br>10.00 am | KKSSS : Awareness on Child welfare schemes, SHG Pongal Celebrations<br>FA : Marriage Preparation Course @ Kalluvilai |
| 11 | Sat | 10.00 am<br>10.00 am<br>10.00 am<br>06.00 pm | CAT : Promoters and Secretaries Meet @ Kalluvilai<br>FA : Marriage Preparation Course @ Kalluvilai<br>MJ: Meeting of Animators and Parish Leaders<br>SINAI : Evening retreat @ Malaicode |

| | | | |
|---|---|---|---|
| 12 | Sun | 10.00 am<br>02.00 pm<br>02.00 pm<br>02.00 pm<br>02.00 pm<br>03.00 pm | FA : Marriage Preparation Course<br>KKSSS : Gatekeeping training program @ Chenamcode<br>LC : Forane Leaders Meet<br>SMYM : Central Team and Forane Executive Meet<br>SVP : AC Meeting<br>PULARI : SHG Pongal Celebrations @ Border |
| 13 | Mon | | EIRD : UCC Meeting |
| 14 | Tue | 10.00 am | SSINAI : Intercessory Prayer |
| 15 | Wed | 10.00 am<br>10.00 am<br>10.00 am<br>10.00 am | Education Commission Meeting @ Bishop's House<br>CML : National Secretariat Meeting<br>KKSSS : Educare Class<br>SMYM : Pongal Celebration |
| 16 | Thu | 09.30 am<br>10.00 am<br>02.00 pm | Curia Meeting @ Bishop's House<br>CAT : Diocesan Level Competitions @ Padanthalummoodu<br>Jubilee 2025 Committee Meeting @ Bishop's House |
| 17 | Fri | 06.00 pm | SINAI: Evening Retreat @ Palappallam |
| 19 | Sun | 02.00 pm<br>02.00 pm | SMYM : Unit Visits in Thuckalay - Plankalai Forane<br>MJ : Forane Level Election |
| 20 | Mon | 09.30 am | Inter Diocesan Meet @ Sangamam |
| 24 | Fri | 10.00 am | KKSSS: Awareness on Girl Child Day |
| 25 | Sat | 10.00 am | SINAI : One Day Retreat @ Kalluvilai |

| | | | |
|---|---|---|---|
| 26 | Sun | 02.00 pm<br>02.00 pm<br>02.00 pm | CAT : Basic Training Program for Catechists<br>KKSSS : Grama Sabha<br>SMYM : Unit Visits in Thuckalay - Plankalai Forane |
| 27 | Mon | 09.30 am | Curia Meeting @ Bishop's House |
| 28 | Tue | 10.00 am<br>10.00 am | Priest' Conference @ Sangamam<br>SINAI : Intercessory Prayer |
| 29 | Wed | 10.00 am | Finance Council @ Bishop's House |
| 31 | Fri | 10.00 am<br>12.00 pm | Forane Vicars Meeting & Don Bosco Feast @ Sangamam<br>Provincials and Regional Superiors Meeting @ Sangamam |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

## சீனாய் இறையியல் மையம் சார்பில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



பொதுநிலையினருக்கு இறையியல் பயிற்றிவிக்கும் நிறுவனமாகிய, சீனாய் இறையியல் நிலையத்தின் சார்பில், கிறிஸ்மஸ் கொண்டாட்டமானது, டிசம்பர் 22 அன்று படந்தாலுமூட்டில் வைத்து நடத்தப்பட்டது. இயக்குநர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் மற்றும் இவ்வாண்டு பயிலும் பொதுநிலையினர் பங்கேற்றனர்.

## BISHOP’S ENGAGEMENTS - JANUARY 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | | >> Idukki |
| 2 | Thu | 09.15 am | Thannikandam: Ordination of Dn. Amento |
| 3 | Fri | 05.00 pm | Mukkoottukal : School Annual Day |
| 4 | Sat | 10.00 am | Thuckalay : Benefactor’s Visit |
| 5 | Sun | 08.00 am | Kuttaicode : Feast Day Qurbana >> Kakkanad |
| 6-11 | Mon - Sat | 09.00 am | Kakkanad: Syro-Malabar Synod |
| 12 | Sun | 10.00 am | Muttar : First Holy Communion |
| 13 | Mon | 04.00 pm | Thuruthy : First Holy Communion |
| 14 | Tue | 10.00 am | Thekkekkara : Requiem Mass >> Thuckalay |
| 15 | Wed | 06.00 am<br>10.00 am | Paraicode : First Holy Communion<br>Bishop’s House : Education Commission Meeting |
| 16 | Thu | 09.30 am<br>02.00 pm | Bishop’s House : Curia Meeting<br>Bishop’s House : Jubilee 2025 Committee Meeting |
| 17 | Fri | 03.00 pm | Mukkootukal : Minor Seminary Visit |
| 18 | Sat | 09.00 am | Tenkasi: Pulari School Annual Day |
| 19 | Sun | | Bishop’s House |
| 20 | Mon | 09.30 am<br>06.00 pm | Sangamam : Inter Diocesan Meet<br>Mukkootukal : Feast Day Qurbana |
| 21 | Tue | 10.00 am | Madhurai : TNBC Meeting |
| 22 | Wed | 10.00 am | Trichy: Health Commission Meeting >> Changancherry |

| | | | |
|---|---|---|---|
| 23 | Thu | 05.00 pm | Podippara : Feast Day Qurbana >> Thuckalay |
| 24 | Fri | 05.00 pm | Nagercoil : School Annual Day |
| 25 | Sat | 05.00 pm | Pudur : School Annual Day |
| 26 | Sun | 08.00 am<br>03.00 pm | Varuthattu : First Holy Communion<br>Azhakiaymandapam : Vincent De Paul Meeting |
| 27 | Mon | 09.30 am | Bishop's House: Curia Meeting |
| 28 | Tue | 10.00 am | Sangamam : Priest' Conference |
| 29 | Wed | 10.00 am | Bishop's House: Finance Council |
| 30 | Thu | | Prayer Day |
| 31 | Fri | 10.00 am<br>12.00 pm | Sangamam: Forane Vicars Meeting & Don Bosco Feast<br>Sangamam : Provincials and Regional |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**

## இறையருள் குடும்பத்தின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

மறைமாவட்ட, செய்தி இதழான இறையருள் வெளிவர பல்வேறு விதங்களில் உதவி வரும் அனைவருமாக, ஆயரோடு இணைந்து கிறிஸ்மஸ் விழாவை டிசம்பர் 21ஆம் தேதி, படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து கொண்டாடினார்கள். இதழுக்கான செய்தி சேகரிப்பு, பதிவு செய்தல், வெளியிடுதல் போன்றவற்றைப் பற்றிய மதிப்பீடும் அன்று செய்யப்பட்டது. ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி வழங்கி அனைவருக்கும் பரிசுகளை வழங்கினார்.





Christmas Vigil Mass, December 24, 2024, Mathapuram



Mariyayin Senai Anniversary, December 7, 2024 St. Alphonsa College, Karinkal




Youth (SMYM) Christmas Gathering, December 15, 2024, Varuthattu



Christ Jubilee, Inauguration, December 28, 2024, St. George Church, Munchirai - Diocesan Pilgrim Centre



Christ Jubilee, Inauguration, December 28, 2024, St. Alphonsa Church, Nagercoil - Diocesan Pilgrim Centre



Christ Jubilee, Inauguration, December 28, 2024, Holy Cross Church, Malaicode - Diocesan Pilgrim Centre


**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,

Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570